بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - துல் ஹஜ் 17

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - இஹ்ஸான் 04 ★ 04 ஜீன் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِیۡنَ اٰمَنُوۡا وَتَطۡمَئِنُّ قُلُوۡبُہُمۡ بِذِکۡرِ اللّٰہِ اَلَا بِذِکۡرِ اللّٰہِ تَطۡمَئِنُّ الۡقُلُوۡبُ ○

இவர்களே நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களின் உள்ளமே அல்லாஹ்வின் நினைவால் அமைதியடைகின்றது. கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன. (அர் ரஅத்: 29)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## எந்த வீட்டில் இறை தியானம் செய்யப்படுகின்றதோ அது உயிருள்ள வீடாகும்

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை நினைவு கூருபவருக்கும், அல்லாஹ்வை நினைவு கூராதவருக்கும் உள்ள உதாரணம், உயிருள்ளவருக்கும், இறந்தவருக்கும் உள்ள உதாரணத்தைப் போன்றதாகும். அதாவது, இறைவனை நினைவு கூருபவர் உயிருள்ளவர் ஆவார், நினைவு கூராதவர் இறந்தவர் ஆவார்.'

முஸ்லிம் ஹதீஸின் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது,

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

' எந்த வீடுகளில் அல்லாஹ் நினைவு கூரப்படுகிறானோ அந்த வீடுகளுக்கும், எந்த வீட்டில் அல்லாஹ் நினைவு கூரப்படவில்லையோ அந்த வீடுகளுக்கும் உள்ள உதாரணம் உயிருள்ளவருக்கும் மரணித்தவருக்கும் உள்ள உதாரணத்தைப் போன்றதாகும்.'(புஹாரி)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து கூறினார்கள்: மக்களே! சொர்க்கத்தின் நந்தவனங்களில் மேய்ந்து கொள்ளுங்கள் (பயன்பெறுங்கள்).' நாங்கள் கேட்டோம்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! சொர்க்கத்தின் நந்தவனங்கள் என்றால் என்ன? நாங்கள் கேட்டோம். அதற்கு, 'அவை இறைவனை நினைவு கூரும் சபைகளாகும்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.மேலும், கூறினார்கள்: 'காலை மற்றும் மாலை வேளைகளில் குறிப்பாக அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அல்லாஹ்விடம் தனக்குள்ள அந்தஸ்து மற்றும் மதிப்பை அறிய விரும்பும் நபர், அல்லாஹ்வுக்குத் தன் இதயத்தில் என்ன மதிப்பு இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்! ஏனெனில், தன் அடியான் தன் இதயத்தில் தனக்கு எவ்வளவு மதிப்பு வைத்துள்ளானோ, அவ்வளவு மதிப்பைத்தான் அல்லாஹ்வும் அந்த அடியானுக்கு வழங்குகிறான்.'(ஹதீகத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 75-76)

* * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## அல்லாஹ்வின் நினைவு எத்தகைய விஷயம் என்றால் அது உள்ளங்களுக்கு அமைதியை வழங்குகின்றது

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் ஒரு சிறிய கவலை ஏற்பட்டால் கூட, அன்னார் (ஸல்) தொழுகைக்காக எழுந்து நின்று விடுவார்கள். மேலும் அதற்காக,

اَلَا بِذِکۡرِ اللّٰہِ تَطۡمَئِنُّ الۡقُلُوۡبُ

(அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலமே இதயங்கள் அமைதி பெறுகின்றன) என்று கூறப்பட்டுள்ளது. இதயத்தின் அமைதிக்கு தொழுகையை விடச் சிறந்த வழிமுறை வேறு எதுவுமில்லை.(அல்-ஹகம், தொகுதி 7, எண் 20, நாள்: 31 மே 1903, பக்கம் 9)

திருக்குர்ஆனிலிருந்து தெரியவருவது என்னவென்றால்,

اَلَا بِذِکۡرِ اللّٰہِ تَطۡمَئِنُّ الۡقُلُوۡبُ என்று அல்லாஹ் கூறியது போன்று, அல்லாஹ்வை நினைவு கூர்வது என்பது இதயங்களுக்கு அமைதியை வழங்கும் ஒரு விஷயமாகும்;

எனவே, இயன்ற வரை அல்லாஹ்வின் நினைவில் மூழ்கியிருக்க வேண்டும், அப்போதுதான் அதனால் அமைதி கிடைக்கும். இதற்காகப் பொறுமையும், உழைப்பும் தேவைப்படுகிறது. ஒருவர் சோர்வடைந்து பின்வாங்கிவிட்டால், அவருக்கு இந்த அமைதி கிடைக்காது.(அல்-ஹகம், தொகுதி 9, எண் 26, நாள்: 10 ஜூலை 1905, பக்கம் 8)

' اَلَا بِذِکۡرِ اللّٰہِ تَطۡمَئِنُّ الۡقُلُوۡبُ

என்பதன் பொதுவான பொருள் என்னவென்றால், அல்லாஹ்வின் நினைவால் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதாகும்.

ஆனால் இதன் உண்மையும், தத்துவமும் என்னவென்றால்,

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

**தஃப்ஸீரே கபீரிலிருந்து**

## நீங்கள் இறைப் பண்புகளின் கண்ணாடியாக ஆகிவிடுங்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் கூறுகின்றான்: நீங்கள் அல்லாஹ் கூறிய வழிமுறைகளின்படி ஹஜ்ஜுடைய கடமைகளை நிறைவேற்றி முடித்துவிடும்போது, நீங்கள் உங்களுடைய முன்னோர்களை நினைவுகூருவதைப் போன்று அல்லாஹ்வை நினைவு கூருங்கள். ஹஜ்ஜை முடித்துத் திரும்பும்போது, மினாவில் மூன்று நாட்கள் தங்கி, சபைகளைக் கூட்டி, தங்களுடைய முன்னோர்களின் சாதனைகளையும், தங்கள் குலத்தின் வீரம், புகழ் மற்றும் வள்ளல் தன்மை ஆகியவற்றைப் பற்றிய கவிதைகளையும் பாடிப் பெருமை பேசுவது அரபு மக்களின் வழக்கமாக இருந்தது.

அல்லாஹ் கூறுகிறான்; அந்த மக்களோ தங்களது முன்னோர்களின் புகழ்பாடி வந்தனர்; ஆனால், நாம் உங்களுக்கு வழங்கும் வழிகாட்டல் இதுவாகும். அதாவது, நீங்கள் ஹஜ்ஜின் வணக்கத்தை நிறைவேற்றி முடித்துவிட்டால், உங்கள் முன்னோர்களை நீங்கள் நினைவு கூருவதைப் போன்று, அல்லது அதை விடவும் அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அதாவது, ஒரு சிறிய குழந்தை தன் தாயிடமிருந்து பிரியும்போது அழுது அடம் பிடித்து, 'நான் என் அம்மாவிடமே செல்வேன்' என்று

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## துஆவும் இறை தியானமும் - இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான மகத்தான ஆயுதங்கள்

இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மூலமான இஸ்லாத்தின் வெற்றி என்பது, திருக்குர்ஆனின் ஒளியமயமான சான்றுகள், துஆக்கள் மற்றும் இறை தியானத்தால் நிகழும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள். அதற்காகவே ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் அழுத்தம் கொடுத்தார்கள். மேலும், துஆக்களிலும், இறை தியானத்திலும் எத்தகைய ஓர் ஆன்மீக ஞானத்தை வழங்கினார்கள் என்றால், அதற்கு நிகர் எங்கும் கிடைப்பதில்லை.

அன்னாருக்குப் பின் தோன்றிய கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள், துஆக்கள் மற்றும் இறை தியானம் ஆகியவற்றிற்கான உலகளாவிய திட்டங்களை அவ்வப்போது தொடங்கி வைத்தனர். இதன் காரணமாக, உலகம் முழுவதும் உள்ள ஜமாஅத்துகள் உலகளாவிய அளவில் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றன. மேலும், கடந்த நூற்றாண்டு காலகட்டத்தில் இந்த ஜமாஅத் துஆக்கள் மற்றும் இறை தியானத்தின் விளைவால் எத்தகைய அருட்களை பெற்றது என்றால், அதனை எண்ணிக்கையில் அடக்க முடியாது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1916 ஆம் ஆண்டில் இது தொடர்பாக ஒரு விரிவான உரை நிகழ்த்தினார்கள். அதிலிருந்து இறை தியானம் மற்றும் துஆவின் முக்கியத்துவம் மிகத் தெளிவாக புலப்படுகிறது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் இந்தப் பண்பை இவ்வாறு எடுத்துரைத்துள்ளான்:

அவர்கள் வானங்கள் மற்றும் பூமியின் மகத்துவ மிக்கப் படைப்புகளைப் பார்த்தவாறு நின்ற நிலையிலும்,அமர்ந்த நிலையிலும், படுக்கையில் சாய்ந்திருக்கும் போதும் அல்லாஹ்வை நினைவுகூருகிறார்கள். (ஆலி இம்ரான்: 192)

அடுத்து, அல்லாஹ் கூறுகிறான்: எப்போதாவது அவர்களிடம் ஏதேனும் தவறு நடந்துவிட்டால், அவர்கள் உடனடியாக அல்லாஹ்வை நினைவுகூருகின்றனர்.

மேலும், கூறினான்: அவர்கள் ஏதேனும் வெட்கக் கேடான செயலை செய்து விட்டாலோ அல்லது அவர்கள் தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருகின்றனர். (ஆலி இம்ரான் : 137)

அடுத்து கூறுகின்றான்: அல்லாஹ்வின் நல்லடியார்கள் தங்கள் மீது அல்லாஹ் செய்த அருட்கொடைகளை காணும்போது அல்லாஹ்வை மிக அதிகமாக நினைவுகூருகிறார்கள்.
(அல்-பக்கரா: 232)

அடுத்து கூறுகின்றான்: அல்லாஹ்வின் அடியார்கள் அவனை நினைவுகூருவர்; மேலும் அவனை நினைவில் கொள்வர். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் நினைவு கூருவான். கூறினான்: நீங்கள் என்னை நினைவுகூர்ந்தால், உங்கள் சோதனைக் காலங்களிலும் துன்பங்களிலும் நான் உங்களை நினைவில் கொள்வேன். அல்லாஹ் தனது நல்லடியார்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு கூறுகிறான்:

எவர்கள் இறையச்சத்தை மேற்கொண்டார்களோ, அவர்களிடம் ஷைத்தானின் தரப்பிலிருந்து ஏதேனும் துன்பம் விளைவிக்கும் எண்ணமோ ஏற்பட்டால், அவர்கள் அதிகமாக அல்லாஹ்வை நினைவுகூர்ந்து கொண்டிருப்பர். (அல்-அஃராஃப்: 202)

எவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதில்லையோ, மேலும் அலட்சியமாக இருக்கின்றார்களோ, அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

எவருடைய உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவை விட்டும் கடினமாகிவிட்டனவோ, அவர்களுக்கு அழிவுதான். அவர்கள் வழிகேட்டில் இருக்கிறார்கள். (அஸ்ஸுமர்: 23)

மேலும், அல்லாஹ் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறினான்:

**எவரெல்லாம் எனது நினைவை விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்கின்றாரோ, அவரை நாம் தீய சந்ததிகள் மூலம் சோதனையில் ஆழ்த்துவோம். மேலும், அந்த சந்ததியினர் மார்க்கமற்றவர்களாக இருப்பர். அவர்களது ஈர்ப்பு உலகத்தின் பக்கம் இருக்கும், மேலும் அவர்கள் இறை வணக்கத்திலிருந்து அலட்சியமாக இருப்பர்.'(தத்கிரா, பக்கம்: 382)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறை தியானத்தை சொர்க்கத்தின் தோட்டங்களுடன் ஒப்பிட்டுள்ளார்கள். மேலும், அல்லாஹ்வை நினைவுகூருபவனுக்கும், நினைவுகூர தவறுபவருக்கும் உள்ள வித்தியாசம் உயிருள்ளவனுக்கும், இறந்துபோனவனுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்றது என்று கூறியுள்ளார்கள். மேலும் கூறினார்கள்: எந்த வீட்டில் இறைவனின் திருநாமம் உச்சரிக்கப்படுகிறதோ, அந்த வீடு செழிப்பாக இருக்கும். இறை தியானம் இல்லாத வீடுகள் பாழடைந்து வறண்டு போகும்.

எனவே தான் வீடுகளிலும் தொழுகைகளை நிறைவேற்றுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்! காலத்தின் கலீஃபாக்கள் துவக்கம் முதலே அஹ்மதிகளுக்கு இறை தியானம் மற்றும் துஆவின் முக்கியத்துவத்தின் பக்கம் அவ்வப்போது நினைவூட்டி கொண்டிருக்கின்றனர். இன்னும் கூறப்போனால், இறை தியானத்தின் பல்வேறு திட்டங்களை ஜமாஅத்தின் முன் வைத்து வருகின்றனர். அஹ்மதிய்யா வரலாறு இதற்கு சாட்சியாகும். இந்தத் திட்டங்களின் மூலமாகவும் ஜமாஅத் தீமைகளிலிருந்து விலகி, நன்மைகளையும், ஆன்மீக செழுமையையும் பெற்றது என்பதற்கு அஹ்மதிய்யத்தின் வரலாறு சாட்சியாகும். மேலும், எதிர்ப்புகளின் மலைகள் இதே துஆக்களின் மூலமே தூள் தூளாக்கப்பட்டது. மேலும், ஜமாஅத்திற்கு உலகளாவிய வெற்றிகள் கிடைத்தன.

أَقِمِ الصلوٰة لذكرى

பொருள்:

**நீங்கள் என்னையே வணங்கி என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநாட்டுங்கள்.** (தாஹா: 15))
என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளது போன்று, உண்மையில், தொழுகையே மிகச் சிறந்த இறை தியானம் ஆகும்.

மேலும், திருக்குர்ஆனும் ஒரு திக்ர் ஆகும் என்று இறைவன் கூறியுள்ளான். உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான்:

انا نحن نزلنا الذكر و انا له لحافظون

நிச்சயமாக நாமே இந்த திக்ரை (திருக்குர்ஆனை) இறக்கினோம்; நாமே அதனை பாதுகாப்போம். (அல் ஹிஜ்ர்: 10).

**அல்லாஹ்வின் நல்லடியார்கள் நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும், ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும், எந்த ஒரு வேலையைச் செய்யும் போதும் அல்லாஹ்வை நினைவுகூருகின்றனர்** என்பதை நாம் திருக்குர்ஆனிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: மிகச் சிறந்த திக்ர் لا اله الا الله என்பதாகும்.

**அதாவது, மிகச் சிறந்த திக்ர் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும், அவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்வதாகும்.**

மேலும், தஸ்பீஹ் மற்றும் தஹ்மீத் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இந்த இரண்டு வார்த்தைகளும் நாவினால் உச்சரிப்பதற்கு மிக எளிதானதாகும். ஆனால், இறைவனின் தராசில் மிகக் கனமானவையாகும். மேலும், அவை அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானவையாகும்; அவை:

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

**என்று கூறுவதாகும்.**

இதேபோன்று, ஸலவாத் ஓதுவது தொடர்பாக கூறினார்கள்: இவை துஆக்கள் மற்றும் இறை தியானம் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழிமுறையாகும்.

இதனால்தான், அஹ்மதிகளாகிய நாம் அனைவரும் பின்வரும் துஆக்களை எப்போதும் ஓதிவர வேண்டும் என்று ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஏகத்துவம் தொடர்பாக வழங்கிய**

**பொன்னான அறிவுரைகள்**

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஏப்ரல் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **10 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَحْدَہٗ لَا شَرِیْکَ لَہٗ وَاَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰہِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ

بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ اَلْحَمْدُ لِلّٰہِ رَبِّ الْعٰلَمِیْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

مٰلِكِ یَوْمِ الدِّیْنِ ○ اِیَّاكَ نَعْبُدُ وَاِیَّاكَ نَسْتَعِیْنُ ○ اِھْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِیْمَ ○

صِرَاطَ الَّذِیْنَ اَنْعَمْتَ عَلَیْھِمْ ۙ غَیْرِ الْمَغْضُوْبِ عَلَیْھِمْ وَلَا الضَّآلِّیْنَ ○

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது எஜமானரைப் பின்பற்றுதலில் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சி, அன்னாருடைய செயல் முன்மாதிரிகள் மற்றும் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அன்னார் (அலை) செய்த அறிவுரைகள் மேலும் அன்னார் (அலை) எவ்வாறு அவர்களுக்கு மார்க்கப் பயிற்சி வழங்கி வந்தார்கள்? போன்ற விஷயங்கள் தொடர்பாக சில சம்பவங்களை (இன்று) எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

ஒரு நபரின் மகன் இறந்துவிட்டார். அவருடைய ஒரு நண்பர் அவருக்கு ஆறுதல் கூறுவதற்காக அவரிடம் சென்றபோது, அவர் கதறி அழுதார்; மேலும், 'இறைவன் என் மீது பெரும் அநீதி இழைத்துவிட்டான்' என்று கூறத் தொடங்கினார். அதாவது, அவருடைய பார்வையில் இறைவன் அவருடைய ஏதோ ஓர் உரிமையை பறித்து விட்டான் என்று அவர் எண்ணினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (ரலி) கூறினார்கள்: '

ஆனால், இறைவனிடம் அடியார் நிலைநாட்டியுள்ள அந்த உரிமை எது? என்று சிந்திக்க வேண்டும், தங்களின் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் மற்றும் இறையச்சம், தூய்மை ஆகியவற்றில் பெருமை கொள்ளும் நபர்கள், ஏதேனும் ஒரு துன்பம் வரும்போது 'இறைவன் தமக்கு அநீதி இழைத்துவிட்டான்' என்று அலறத் தொடங்குவதைக் கண்டு நான் எப்போதும் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால், இந்தியாவின் மது விரும்பி கவிஞர் ஒருவர் இருந்தார். அவர் மார்க்கத்தில் இருந்து முற்றிலும் கவனமற்றவராக இருந்தார். ஓர் உண்மைக்கான ஒரு தருணத்தில், அவரது குடிப்பழக்கத்திற்கு மத்தியிலும், அவரது உள்ளத்தில் இறைவனின் இல்ஹாம் இறங்குகிறது. அப்போது அவர் இவ்வாறு கூறத் தொடங்கினார்:

'உயிர் அவனால் கொடுக்கப்பட்டது, அது அவனுடையதேயாகும்,

உண்மை என்னவென்றால், கடமை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

(துன்யா மே தர்ரகி கர்னே கே குர், அன்வாருல் உலூம், பாகம் 12, பக்கம் 311-312)

**எனவே, மனிதனுக்கு எப்போதும் இந்த எண்ணமே இருக்க வேண்டும். அதாவது தமக்கு கிடைத்துள்ள அருட்கொடைகளும், சந்ததிகளும் அல்லாஹ்வின் அருளினால்தான் கிடைத்துள்ளன என்று எண்ணம் கொள்ள வேண்டும். இந்த விஷயம் நம்மிடம் எதனை எதிர்பார்க்கின்றது என்றால், நாம் எப்போதும் அல்லாஹ்வின் முன் குனிந்து இருக்க வேண்டும்; மேலும், அவனது ஏகத்துவத்தை நமது ஒவ்வொரு சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்த வேண்டும்; மேலும், இணைவைப்பின் சிறிய நிழல் கூட நமக்குள் உருவாகி விடக் கூடாது. இறைவன் மீது நமக்கு ஏதோ உரிமை உள்ளது என்றும், மேலும், சிறிதளவு இறை வணக்கம் செய்து விடுவதால் கடமை நிறைவேறி விடுகின்றது என்றும் ஒருபோதும் கருதி விட வேண்டாம். இன்னும் கூறப்போனால், நாம் அவற்றை நமது நன்மைக்காகவே செய்கின்றோம்.**

அன்னார் (ரலி) எந்தக் கவிஞரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்களோ அவரோ இதனையே கூறுகின்றார்:

இறைவன் தான் உயிரைக் வழங்கியிருந்தான்; இந்த உலகில் அவன் படைத்திருக்கின்றான்; மேலும் நாம் இந்த உலகிற்கு வந்தோம். ஆனால், அவனுக்கு நாம் செலுத்த வேண்டிய நன்றிக் கடனை நம்மால் செலுத்த முடியாது.

இதே போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சொந்த மகனான ஹஸ்ரத் மிர்ஸா முபாரக் அஹ்மது அவர்களின் மரணத்தின் போது நடந்த ஒரு நிகழ்வை எடுத்துரைக்கின்றார்கள். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இளைய மகனாக இருந்தார்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு முபாரக் அஹ்மது மீது மிகுந்த அன்பு இருந்தது. அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருக்கு அன்னார் (அலை) மிகவும் பணிவிடை செய்தார்கள். இதனால், 'ஒருவேளை முபாரக் அஹ்மது இறந்துவிட்டால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்படும்' என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எண்ணினார்கள்.

இறுதித் தருணத்தில், மௌலவி ஸாஹிப் அவர்கள் அவரது நாடித் துடிப்பைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள். நாடித் துடிப்பு நின்று போவதை உணர்ந்த அன்னார் (ரலி), 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம், கஸ்தூரி கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். ஏனெனில், அவரது மரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்படும் என்று அன்னார் (ரலி) எண்ணினார்கள். அதன் தாக்கம் அன்னார் (ரலி) மீது எந்த அளவு ஏற்பட்டது என்றால், அன்னார் (ரலி) அதாவது 'ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நின்ற இடத்திலேயே தரையில் விழுந்துவிட்டார்கள்'.

அதாவது, 'அவரது மரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சி ஏற்படும்' என்ற எண்ணத்தினாலேயே அன்னார் (ரலி) கீழே விழுந்து விட்டார்கள்.

ஆனால், முபாரக் அஹ்மது இறந்துவிட்டார் என்ற செய்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குத் தெரிந்தவுடன், முபாரக் அஹ்மது இறந்துவிட்டார்; ஆனால் இந்த விஷயத்தில் நாம் பதற்றமடையக் கூடாது; இது இறைவனின் நாட்டமாகும்; நாம் இதில் பொறுமை காக்க வேண்டும்' என்று அன்னார் (அலை) அந்த நேரத்திலேயே மிகுந்த பொறுமையுடன் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதத் தொடங்கி விட்டார்கள். அதன் பிறகு, முபாரக் அஹ்மது குறித்து இறைவனிடமிருந்து கிடைத்திருந்த இல்ஹாம் நிறைவேறி விட்டது என்று வெளியே வந்து

புன்னகைத்தவாறே உரையாற்றத் தொடங்கி விட்டார்கள். அதற்கேற்ப அன்னாருடைய ஒரு கவிதையும் உள்ளது:

அழைப்பவன் அனைவரையும் விட அன்பானவன் ஆவான்.

எனவே ஓ! மனமே! உன் உயிரை அவனுக்காக அர்ப்பணிப்பாயாக!

(நஜாத், அன்வாருல் உலூம், பாகம் 7, பக்கம் 65-66)

இதேபோன்று, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு மற்றோர் இடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடமிருந்து ஒரு விஷயத்தை நான் பலமுறைக் கேட்டுள்ளேன். துருக்கியின் சுல்தான் அப்துல் ஹமீத் கான் பதவியிறக்கப்பட்டதை அன்னார் (அலை) குறிப்பிடும்போது, 'சுல்தான் அப்துல் ஹமீத் கானின் ஒரு விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது' என்று கூறினார்கள். அவரிடம் பல தவறான விஷயங்கள் இருந்தபோதிலும், அவரின் இந்த ஒரு விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது என்று அன்னார் (அலை) கூறி வந்தார்கள். அது என்னவென்றால்? 'கிரேக்கத்துடன் போர் செய்வதற்கான கேள்வி எழுந்தபோது, அமைச்சர்கள் ஏராளமான சாக்குபோக்குகளைக் கூறினர். உண்மையில் போர் நிகழ வேண்டும் என்பதே சுல்தான் அப்துல் ஹமீத் கானின் விருப்பமாக இருந்தது. ஆனால், வேண்டாம் என்பது அமைச்சர்களின் விருப்பமாக இருந்தது. எனவே, அவர்கள் பல சாக்குபோக்குகளைக் கூறினர். இறுதியாக அவர்கள் கூறினர்: போருக்கு இந்த விஷயமும் தயார்; அந்த விஷயமும் தயார்; ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டு, 'இன்ன விவகாரத்திற்கான ஏற்பாடு இல்லை' என்று கூறிவிட்டனர்.

' அதாவது, சம்மதம் தான்; நாங்கள் தயாராக இருக்கிறோம்; ஆனால் இந்த குறைபாடு உள்ளது; அந்த குறைபாட்டின் காரணமாக போர் செய்வது மிகவும் கடினமாகும் என்று கூறினர். உதாரணமாக, இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் கூறினர்: (அநேகமாக இவ்வாறே கூறியிருப்பார்கள்) அனைத்து ஐரோப்பிய சக்திகளும் இப்போது கிரேக்கத்திற்கு உதவ வேண்டும் என்ற இந்த விஷயத்தில் ஒன்றுபட்டுள்ளன. அதற்கு நம்மிடம் எந்த தீர்வும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிவந்தார்கள்:

அமைச்சர்கள் தங்கள் ஆலோசனையை முன்வைத்தனர். மேலும் பிரச்சனைகளை எடுத்துரைத்தனர். மேலும், 'இன்ன இன்ன விஷயங்களுக்கு ஏற்பாடுகள் இல்லை' என்று கூறியபோது, 'எந்த ஏற்பாடும் இல்லையென்றால், அதை இறைவனிடத்தில் விட்டுவிட வேண்டும்' என்று சுல்தான் அப்துல் ஹமீது பதிலளித்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், சுல்தான் அப்துல் ஹமீதின் இந்த வார்த்தைகளை மிகவும் ரசித்து வந்தார்கள். மேலும். அவர் இறைவனின் மீது நம்பிக்கை வைத்தார் என்ற இந்த விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று கூறினார்கள். (தஃப்ஸீர் கபீர், தொகுதி 9, பக்கம் 163-164, புதிய பதிப்பு)

ஏகத்துவத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டிருந்த தன்மான உணர்வைப் பற்றிய ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு, ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

முன்ஷி ஸஃபர் அஹ்மது ஸாஹிப் கபூர்தலவி அவர்கள் கடிதம் மூலம் என்னிடம் எடுத்துரைத்தார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தலைச்சுற்றல் நோயின் வேதனை இருந்தது. தலைச்சுற்றல் நோய் இருந்தது. ஒரு மருத்துவரைப் பற்றி, அவர் இதில் தனித் தேர்ச்சி பெற்றவர் ஆவார் என்று கேள்விப்பட்டோம். தலைச்சுற்றல் நோய்க்கான வேதனையின் சிகிச்சையில் அவர் ஒரு பெரிய நிபுணர் ஆவார் என்று கூறப்பட்டது. அவர் வரவழைக்கப்பட்டார். அவருக்கான பயணக் கட்டணம் அனுப்பி வைக்கப்பட்டது; மிகவும் தொலைவிலிருந்து செலவு செய்து அழைத்து வரப்பட்டார்.

அவர் வந்து ஹுஸுர் (அலை) அவர்களைப் பரிசோதித்துவிட்டு, 'நான் உங்களை இரண்டு நாட்களில் குணப்படுத்திவிடுவேன்; இது ஒரு விஷயமே இல்லை; இரண்டு நாட்களில் நான் உங்களைச் சரியாக்கி விடுகிறேன்' என்றார்.

இதைக் கேட்டதும் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் உள்ளே சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு ஒரு துண்டுச் சீட்டில், 'நான் இந்த நபரிடம் எவ்வித சிகிச்சையும் பெற விரும்பவில்லை; இவர் இறைத்தன்மைக்கான வாதம் புரிகின்றாரா என்ன? இவருக்குத் திரும்பிச் செல்வதற்கான பயணக் கட்டணத்தையும், கூடுதலாக இருபத்தைந்து ரூபாயையும் கொடுத்து அனுப்பி வைத்து விடுங்கள்' என்று எழுதி அனுப்பினார்கள். ஆக, அவ்வாறே செய்யப்பட்டது. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பக்கம் 38, அறிவிப்பு எண்: 1038)

இதே போன்று, ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்:

இறைவனது மகத்துவம் மற்றும் கண்ணியத்தின் மீது தன்மானம் கொண்டவர்களை இறைவன் நேசிக்கிறான். இத்தகைய மக்கள் ஒரு நுட்பமான பாதையில் செல்கின்றனர். மேலும், இறைவனுக்காக தன்மானம் கொண்டிராத வரை அவர்களுடன் உயர்ந்தவரும், தாழ்ந்தவரும் பயணிக்க முடியாது. இறைவனுக்காக தன்மான உணர்வு கொள்ளாத வரை மனிதனுக்கு எந்தவோர் இன்பமும் கிடைக்காது. மனிதனுடைய உள்ளத்தில் அல்லாஹ்வுக்காக தனிப்பட்ட தன்மான உணர்வு உருவாகாத வரை, மேலும் அவனது நஃப்ஸின் கலப்படம் மற்றும் தனது உலக ஆதாயங்களுக்கான எண்ணங்களிலிருந்து தூய்மையாகாத வரை, அவனது எந்த இறை வணக்கமும், தருமமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.'

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். மனிதன் தனது நஃப்ஸின் கலப்படம் மற்றும் உலக ஆதாயங்களுக்கான எண்ணங்களிலிருந்து விடுபடாத வரை, அவனது எந்த இறை வணக்கமும், தருமமும் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை.

யார் அல்லாஹ்விற்காக தன்மான உணர்வு கொள்கிறாரோ, அவர் தன் சக மனிதர்களில் உயர்ந்துவிடுகிறார். இத்தகைய மக்கள் இறைவனிடமிருந்து அருட்களைப் பெறுகின்றனர்.'
(ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 182)

**எனவே, துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, ஏகத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கையும், ஈமானும் இருப்பது அவசியமாகும். மேலும் அல்லாஹ்விடம் அவனது அன்பைப் பெறுவதற்கான துஆ எல்லாவற்றையும் விட முதன்மையாக இருப்பதும் அவசியமாகும்.**

'நாங்கள் மிகவும் அதிகமாக துஆ செய்தோம்; நாங்கள் இதைச் செய்தோம், அதைச் செய்தோம், நஃபில் தொழுகைகளைத் தொழுதோம், தருமங்களைச் செய்தோம், ஆனால் எங்களது துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று எந்த நபர்கள் எழுதுகின்றார்களோ, அவர்கள் சற்று இந்த விஷயத்தை சிந்திக்க வேண்டும்.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்த வழிமுறையாகும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு மற்றோரிடத்தில் கூறுகின்றார்கள்:

இறைவனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அன்பிற்கு எத்தகைய அங்கீகாரத்தை வழங்கியுள்ளான் என்றால், அது இறைவனது எல்லையற்ற கருணை மற்றும் அவனது நிகரற்ற அந்தஸ்திற்குரிய அங்கீகாரமாகும். அதன்படி, அன்னாரை (அலை) நோக்கி அல்லாஹ் கூறுகிறான்:

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

اَنْتَ مِنِّيْ بِمَنْزِلَةِ تَوْحِيْدِيْ وَ تَفْرِيْدِيْ
اَنْتَ مِنِّيْ بِمَنْزِلَةِ وَلَدِيْ اِنِّيْ مَعَكَ يَاابْنَ رَسُوْلٍ

அதாவது, இந்தக் காலத்தில் நீர் எனது ஏகத்துவத்தை நிலைநாட்டுபவர் ஆவீர்; மேலும், தவ்ஹீதின் இழந்த செல்வத்தை மீண்டும் உலகில் நிலைநிறுத்துபவர் ஆவீர். எனவே முஹம்மதிய மஸீஹே ! நீர் எனக்கு எனது ஏகத்துவத்தைப் போன்று நேசத்திற்குரியவர் ஆவீர்; கிறிஸ்தவர்கள் பொய் மற்றும் இட்டுக்கட்டின் மூலமாக தமது மஸீஹை இறைவனின் அசல் மகனாக ஆக்கி வைத்துள்ளனர்; எனவே எனது தன்மானம் இவ்வாறு விரும்புகின்றது. அதாவது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மாணவர் கூட அத்ஃபாலுல்லாஹ் என்ற நிலையை அடைய முடியும் என்பதை இந்த உலகம் அறியும் பொருட்டு, ஒரு தந்தை தன் பிள்ளையிடம் காட்டும் அன்பைப் போன்ற அன்பை நான் உம்மிடம் காட்டுவேன். மேலும் நீர் எனது நேசர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் சேவைக்காக இரவு, பகலாக மூழ்கி அவனுடைய அன்பில் இலயித்திருக்கின்றீர்.

எனவே, அந்த நேசரின் ஆன்மீகப் புதல்வன் என்ற அடிப்படையில், எனது அழியாத அன்பையும், எனது நிரந்தரமான நெருக்கத்தின் முத்திரையையும் நான் உமக்கு பதக்கமாக வழங்குகிறேன்.' - (ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத்தே தய்யிபா-பக்கம் 13-14)

நான் இப்போது வாசித்ததுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய அந்த இல்ஹாமின் பொருளாகும்.

அன்னாரது வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டவாறே, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் முக்கிய நோக்கமும், இறுதி இலக்கும் இஸ்லாமிய சேவை மற்றும் ஏகத்துவத்தை நிலைநிறுத்துவது ஆகும். மேலும் இந்தக் காலத்தில், எல்லாவற்றையும் விட ஏகத்துவத்திற்கான பெரும் போட்டி கிறிஸ்தவ மார்க்கத்துடன் இருக்கின்றது. அந்தக் காலத்திலோ இருந்தது. இன்றும், சில பகுதிகளில் உள்ளது. அது ஏகத்துவத்தின் போர்வையில் ஆபத்தான இணைவைப்புக் கொள்கையை கற்பிக்கின்றது; மேலும், அது நவூதுபில்லாஹ்! நாசரேத்தின் ஹஸ்ரத் இயேசுவை இறை மகன் என்று கூறி, இறைவனின் தனித்துவத்திற்கு இணையாக அமர வைத்துள்ளது.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிறித்தவ மதத்திற்கு எதிராக மிகுந்த உத்வேகம் இருந்தது. மேலும், அன்னாரது மஸீஹ் என்ற அந்தஸ்தின் முக்கியப் பணி, சிலுவையை முறிப்பது என்று ஹதீஸ்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எனவேதான், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபிப்பதில் அன்னார் (அலை) மிக அதிக அழுத்தம் கொடுத்து வந்தார்கள். ஏனெனில், இந்த ஒரு விஷயம் நிரூபணமாகி விடுவதன் மூலமே கிறித்தவ மதம் அழிந்துவிடும். அதாவது, மஸீஹின் மரணத்தின் விளைவால், மஸீஹின் இறைத்தன்மையும் எஞ்சியிருக்காது; திரித்துவத்தின் பெயரும் அடையாளமும் நிலைத்திருப்பதில்லை. மேலும் பாவமன்னிப்புக்கான 'பரிகாரம்' என்ற விவகாரமும் அதன் சொந்த கால்களில் நிற்க முடியாது. நிச்சயமாக, மஸீஹே நாஸிரியின் மரணம் என்ற கோட்பாடு, இயல்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் தமது உண்மைத்தன்மைக்கான சான்றுகளில் முதல் படியாகவும் இருக்கின்றது. ஆனால், இந்த விவகாரத்தின் அசல் முக்கியத்துவம் என்னவென்றால், அது 'தற்போதைய கிறிஸ்தவ மதத்தின் "கண்டன்" அதாவது மறுப்பு ஆகும். 'கண்டன்' என்பது ஒரு இந்திச் சொல்லாகும். இதன் பொருள் 'மறுப்பு' என்பதாகும். அதன் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இதில் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

ஆக, அன்னார் (அலை) பெரும்பாலும் கூறிவந்தார்கள்:

மஸீஹை மரணிக்க விடுங்கள். அதில் தான் இஸ்லாத்தின் வாழ்வு அடங்கியுள்ளது. அந்தோ! நம்முடைய மற்ற முஸ்லிம் சகோதரர்கள் இந்த நுணுக்கத்தைப் புரிந்து கொண்டு, குறைந்தபட்சம் கிறிஸ்தவத்திற்கு எதிரான இந்தப் போட்டியில் நம்முடன் கைகோர்க்க வேண்டுமே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தை ஏற்பதோ, மறுப்பதோ அது வேறு விஷயமாகும். ஆனால், குறைந்தபட்சம் இஸ்லாத்தின் மேன்மை வெளிப்படும் இந்த ஒரு விஷயத்தையாவது அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ மதத்தின் பொய்யான கொள்கைகளும், மேலும் அந்தக் காலத்தில் அந்த நம்பிக்கைகளால் ஏற்பட்ட உலகளாவிய குழப்பங்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் இதயத்தில் எவ்வளவு பெரிய சுமையாக இருந்தன என்றால், அன்னார் (அலை) ஓரிடத்தில் மிகுந்த வேதனையுடனும் துடிப்புடனும் கூறுகின்றார்கள்:

நம்முடைய மற்றும் கிறிஸ்தவர்களின் விவகாரம் ஏதேனும் ஒரு வழியில் தீர்க்கப்பட வேண்டும் என்ற கவலையிலேயே நான் எப்போதும் இருக்கிறேன். இறந்தவர்களை வழிபடும் குழப்பத்தால் எனது இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது, எனது உயிர் விநோதமான நெருக்கடியில் உள்ளது. ஒரு பலவீனமான மனிதன் கடவுளாக்கப்பட்டு, ஒரு பிடி மண் அகிலங்களின் இறைவனாகக் கருதப்படுவதை விட வேறு எந்த விஷயம் மன வேதனைக்கு காரணமாக இருக்க முடியும்? இறுதியில் ஏகத்துவத்திற்கே வெற்றி உள்ளது என்று எனது பாதுகாவலனும், எல்லாம் வல்லோனுமாகிய எனது இறைவன் எனக்கு ஆறுதல் வழங்காமல் இருந்திருந்தால் இந்தத் துக்கத்தால் நான் எப்போதோ அழிந்து போயிருப்பேன்.

(ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் நூல், ஸீரத்தே தய்யிபா- பக்கம்-106 மற்றும் 108)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் இந்த விஷயத்தை அறிகின்றான். மேலும் அவன் ஒவ்வொரு விஷயத்திற்கும் சிறந்த சாட்சியாக இருக்கிறான். அதாவது, எனக்கு அவனது வழியில் எல்லாவற்றையும் விட முதலில் வழங்கப்பட்ட அந்த விஷயம் தூய இதயமாகும், அதாவது இறைவனுடனான உண்மையான தொடர்பாகும். அதற்கு, கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவனைத் தவிர வேறு எதனுடனும் தொடர்பு இருக்கவில்லை. ஒரு காலத்தில் நான் இளைஞனாக இருந்தேன். தற்போது முதியவராகிவிட்டேன். ஆனால், நான் ஆயுளின் எந்தப் பருவத்திலும் கண்ணியமும், மகத்துவமும் மிக்க இறைவனைத் தவிர வேறு எவருடனும் எனது உண்மையான உறவை கண்டடையவில்லை. இந்த அன்பின் உத்வேகத்தின் காரணமாகவே, இறைவனின் மகத்துவத்திற்கும், ஏகத்துவத்திற்கும் எதிராக இருந்த அல்லது அவனுக்கு ஏதேனும் ஒரு வகையில் அவமதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு மதத்திலும் நான் ஒருபோதும் திருப்தி கொள்ளவில்லை. இதனால்தான் கிறிஸ்தவ மதம் எனக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், அதன் ஒவ்வொரு அடியிலும், கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவனுக்கு அவமதிப்பு உள்ளது. தனது நஃப்ஸிற்கு கூட உதவி செய்து கொள்ள முடியாத ஒரு பலவீனமான மனிதர் கடவுளாக ஆக்கப்பட்டுள்ளார்.' (ஹகீக்கத்துல் வஹி', ரூஹானி கஸாயின், தொகுதி: 22, பக்கங்கள்: 59-60)

ஹஸ்ரத் முஃப்தி ஃபஸ்லூர் ரஹ்மான் ஸாஹிப் (ரலி) முஹாஜிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

எனது வீட்டில் அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். இறைவனின் அருளால் ஒன்றுக்குப் பிறகு மற்றொன்று என்று இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தனர். அன்னார் (ரலி) கூறும்போது, 'அவர்கள் இப்போதும் உயிரோடு இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். அதற்குப் பிறகு ஒரு ஆண் குழந்தை பிறந்தது, ஆனால் அவன்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பேசவும் மாட்டான்; காதும் கேட்காது. பொதுவாக முதல் சிறுவன் நோய்வாய்ப்பட்டே இருப்பான். இரண்டாவது ஆண் பிள்ளை புத்திசாலியாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தது.

நான் கூறியது போன்று, ’முதலில் பிறந்தவன் பேசவும் மாட்டான்; கேட்கவும் மாட்டான். பிறகு இரண்டாவதாகப் பிறந்தவன் ஆரோக்கியமாக இருந்தான்.’ மேலும் அவனது பழக்கவழக்கங்கள், குணம் மற்றும் முகம் ஆகியவை உள்ளத்தை எவ்வாறு கவரக் கூடியதாக இருந்தன என்றால், மிகச் சிறிய வயதிலேயே அவன் வீட்டின் எல்லா வேலைகளையும் செய்து வந்தான், சிறு சைகையைக் கூட உடனே புரிந்து கொள்வான். அவன் மிகவும் புத்திசாலியான பையனாக இருந்தான் என்று கூறுகிறார்கள். இந்த சில காரணங்களாலேயே அவன் மீது எனக்கு அதிக அன்பு ஏற்பட்டு விட்டது. முதலாவது பையன் நான்கு வயதாக இருக்கும்போது இறந்துவிட்டான், அவன் எப்போதும் நோய்வாய்ப்பட்டே இருந்தான். ’மற்றொருவனும்’, அதாவது புத்திசாலியாக இருந்தவனும், ’நான்கரை வயதை எட்டியபோது அவனுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. நான் பெரும் சிகிச்சை செய்தேன், ஆனால், எந்த முன்னேற்றத்திற்கான சூழலும் தென்படவில்லை. அவன் நோய்வாய்ப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்கள் கழிந்த நாளன்று இறந்துவிட்டான். அவனுக்கு ’ஸர்ஸாம்’ அதாவது ’ மூளைக்காய்ச்சல் போன்ற ஒரு நோய் ஏற்பட்டது, இதில் மூளையின் சவ்வுகளில் வீக்கம் ஏற்படுகிறது, இது அவனுக்கு ஏற்பட்டு விட்டது. நான் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் சமூகத்தில் துஆவிற்காக ஒரு கடிதம் எழுதினேன். ’இவன் எனக்கு மிகவும் அன்பிற்குரிய மகன் ஆவான். அவன் உயிர்பிழைக்க அவனுக்காக துஆ செய்யுங்கள்.

அன்னார் (அலை) அதற்குப் பதிலளிக்கும் போது, ‘இன்ஷா அல்லாஹ் நான் துஆ செய்வேன். ஆனால், தக்தீரே முப்ரம் (நீங்காத இறை நியதி) உறுதியாகிவிட்டால், அது விலக முடியாது‘ என்று எழுதினார்கள்; அத்துடன் இதையும் எழுதிவிட்டார்கள்.

இதைப் படித்தவுடன், இந்தப் பிள்ளை உயிர் பிழைக்க முடியாது என்று உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது.‘ ஆக, நான்காம் நாளில் அவனது நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. மேலும், ஹுஸுர் (அலை) அவர்கள் அன்றைய தினம் குர்தாஸ்பூர் வழக்கிற்காக செல்லவிருந்தார்கள். நான் வழக்கமாக ஒவ்வொரு தேதியிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் சென்று வந்தேன். எனவே, அங்கு செல்வதற்காக ’ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சமூகத்தில் நானும் ஆஜரானேன். அன்னார் (அலை) வீட்டிலிருந்து வெளியே வருகை தந்தவுடன் முதலில் என்னை நோக்கி, ‘உங்களுடைய குழந்தையின் நிலை எப்படி இருக்கிறது?‘ என்று கேட்டார்கள். ‘ஹுஸுர்! சென்று நேரில் பார்க்கலாமா? அருகிலேயே வீடு உள்ளது என்று கேட்டேன்.

அப்போது, பாருங்கள்! நிலைமை மிகவும் மோசமாக உள்ளது‘ என்று நான் கூறினேன். அன்னார் (அலை) வீட்டிற்குள் வந்து குழந்தையைப் பார்த்தபோது, இவன் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளான்; ‘இன்று நீங்கள் குர்தாஸ்பூர் செல்ல வேண்டாம், இன்று நீங்கள் எம்முடன் வர வேண்டாம்‘ என்று கூறினார்கள்.

அன்னார் (அலை) பயணத்தைத் தொடங்கினார்கள், மறுநாள் பகல் சுமார் நான்கு மணியளவில் குழந்தை இறந்துவிட்டது. அதற்கு அடுத்த நாள் ஹுஸுர் (அலை) அவர்கள் பத்து மணிக்கு குர்தாஸ்பூரிலிருந்து திரும்பி வந்தார்கள். அதைக் கேள்விப்பட்டு நானும் கைகுலுக்குவதற்காக முன்னால் சென்றேன். என் மடியில் சிறிய பெண் குழந்தை இருந்தது, அது அந்தச் சிறுவனை விட இளையதாக இருந்தது.

என்னைப் பார்த்ததும் ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

உங்களுடைய பிள்ளையின் மரணத்தால் எனக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அவன் மீதான உங்களது நேசம் ஷிர்க்கின் எல்லையை எட்டியிருந்தது என்பது எனது எண்ணமாகும். எனவே அவன் உயிருடன் இருப்பது சாத்தியமற்றதாகத் தோன்றியது. எவ்வாறாயினும், நான் உங்களுடைய குழந்தைகளுக்காக அதிகமாக துஆக்கள் செய்துள்ளேன். அல்லாஹ் உங்களுக்கு ஒரு சிறந்த மாற்றை வழங்குவான், அவன் கேட்பவனாகவும், பேசுபவனாகவும் இருப்பான்.‘ - ‘புதிய குழந்தை பிறக்கும். அவன் கேட்பவனாகவும், பேசுபவனாகவும் இருப்பான், முற்றிலும் ஆரோக்கியமாக இருப்பான்‘.

ஆக, அதன் பிறகு ஃபஸ்ல் கரீம் பிறந்தார்,

அன்னாருடைய ஒரு மகனின் பெயர் ஃபஸ்ல் கரீம் என்பதாக இருந்தது. பிறகு அப்துல் ஹஃபீஸ். அதற்குப் பிறகு இரண்டு முறை கருச்சிதைவு ஏற்பட்டது. இரண்டுமே ஆண் குழந்தைகளாக இருந்தன. அவை கலைந்துவிட்டன. ஆனால், எவ்வாறிருப்பினும் அதன் பிறகு இரண்டு குழந்தைகள் உயிருடன் பிறந்தன.

கூறுகின்றார்கள்: ஒரு மகன் பிறந்தான். பிறகு முஹம்மது அப்துல்லாஹ், அதன் பிறகு அப்துல் கரீம்‘ பிறந்தார். ‘மேலும் அவருக்குப் பிறகு அஹ்மது பிறந்தார், இறைவனின் அருளால் இந்த ஐந்து‘ குழந்தைகளும் அதன் பிறகு பிறந்தனர். அல்லாஹ்வின் அருளால் அவர்கள் அனைவரும் ‘உயிருடன் இருக்கிறார்கள்‘, நீண்ட ஆயுள் பெறக் கூடியவர்களாக இருந்தனர்.

எனவே, அன்னார் (அலை) தமது ஸஹாபிகளுக்கும் எப்போதும், ஏகத்துவப் பாடத்தை கற்றுக் கொடுத்து வந்தார்கள். பின்னர் அவர்களின் ஊக்கத்திற்காக துஆவும் செய்து வந்தார்கள். அல்லாஹ் தஆலா அதை ஒப்புக்கொண்டவாறு ஐந்து மகன்களை அன்னாருக்கு அருளினான்.

(ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் அஹ்மது, பகுதி 1, பக்கம் 168 முதல் 170)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பூமியின் பல்வேறு குடியேற்றங்களில் வசிக்கும் அந்த அனைத்து நபர்களும்,




ஐரோப்பாவாக இருந்தாலும் சரி; அல்லது ஆசியாவாக இருந்தாலும் சரி; நற்பண்புகளைக் கொண்டுள்ள அவர்கள் அனைவரையும் ஏகத்துவத்தை நோக்கி ஈர்த்து, தன் அடியார்களை ஒரே மார்க்கத்தில் இணைக்க வேண்டும் என்று அல்லாஹ் தஆலா விரும்புகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும், இதற்காகவே நான் இந்த உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன். எனவே, மென்மையுடனும், நற்பண்புகளுடனும், துஆக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலமும் இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள்.‘ (அல்-வஸிய்யத், ரூஹானி கஸாயின், பாகம் 20, பக்கம் 306-307)

மீண்டும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

என்னுடைய முழு மகிழ்ச்சியும் இதில் தான் உள்ளது. மேலும் என் வருகையின் அசல் நோக்கமும் இதுவே தான்; அல்லாஹ் தஆலாவின் ஏகத்துவமும் கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியமும் உலகில் நிலைநாட்டப்பட வேண்டும். (மல்ஃபூஸாத், பாகம் 3, பக்கம் 85, பதிப்பு 2022)

ஹஸ்ரத் பீர் இஃப்திகார் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு தொண்டரின் பெயர் ’பீரான் தத்தா’ என்பதாகும். கூறுகின்றார்கள்: நாங்கள் அனைவரும் அவரை ’பீரான் தத்தா’ என்ற அந்தப் பெயரிலேயே அழைத்து வந்தோம். ஆனால், ஹுஸுர் (அலை) அவர்கள் அவரை அழைக்கும் போது ’பீரீ தத்தா’ என்று அழைப்பார்கள், ’பீரான் தத்தா’ என்று அழைக்க மாட்டார்கள். இன்னும் கூறப்போனால், ’பீரீ தத்தா’ அதாவது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட எனது சீடர் என்பது அதன் பொருளாகும்.‘

خُذُوا التَّوْحِيْدَ اَلتَّوْحِيْدَ يَاأَبْنَاءَ الْفَارِسِ

என்பதுதான் அல்லாஹ் தஆலா ஹுஸுர் (அலை) அவர்களுக்கு கூறுகின்ற தவ்ஹீத் ஆகும். பாரசீகத்தின் புதல்வர்களே!

தவ்ஹீதை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், தவ்ஹீதை பற்றிக்கொள்ளுங்கள். (இஃப்திகாருல் ஹக் அல்லது இனாமத்தே குதாவந்தி, பக்கம் 229)

எனவே, தமது உயர்வாழ்விற்கும், உள்ளார்ந்த முன்னேற்றத்திற்கும், இந்த இல்ஹாமை அன்னாரின் வம்சத்தைச் சார்ந்தவர்கள், மாறாக அன்னாரை ஒப்புக் கொண்ட ஒவ்வொருவரும் தம் கருத்தில் கொள்ள வேண்டும். அன்னாரின் பைஅத்தின் கீழ் வந்து அனைவரும் பாரசீக புதல்வர்களின் வட்டத்தில் இணைந்து விட்டனர். பிள்ளைகளுடன் இணைந்துள்ளனர்; வம்சத்தில் இணைந்துள்ளனர். ஏகத்துவத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டால் மார்க்கத்திலும், உலகிலும் அவர்களுக்குக் கண்ணியம் கிடைக்கும், இல்லையெனில் எந்தவொரு இரத்த உறவும் பயனளிக்காது. அதேபோன்று, பைஅத் செய்வது மட்டும் பயனளிக்காது.

ஹாஃபிழ் முஹம்மது இப்ராஹிம் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'முதல் முறையாக நான், ஹக்கீம் அப்துல் அஸீஸ் மற்றும் ஹக்கீம் அதா முஹம்மது ஸாஹிப் ஆகியோருடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய சமூகத்தில் ஆஜரானேன். அந்த நாட்களில் ஹுஸூர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூரில் தங்கியிருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அறையிலிருந்து வெளியே வரவிருந்த போது, நாங்கள் மூவரும் வாசலுக்கு அருகே நின்று கொண்டிருந்தோம். நானும் ஹக்கீம் அப்துல் அஸீஸ் ஸாஹிபும் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் கூறிவிட்டு கைகுலுக்கினோம். ஆனால் சகோதரர் அதா முஹம்மது ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பாதங்களில் விழுந்துவிட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் அவரைப் புஜங்களைப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள்; மேலும் கூறினார்கள்:

அல்லாஹ் தஆலா என்னை இக்காலத்தில் இந்த இணை வைத்ததலை அழிப்பதற்காகவே அனுப்பியுள்ளான். கால்களைத் தொட்டுக் கும்பிடுவதும் ஒரு வகையான ஷிர்க் ஆகும். பின்னர் அன்னார் (அலை), அவருடன் கை குலுக்கினார்கள்.'(ரிவாயத்தே அஸ்ஹாப் அஹ்மது, பாகம் 2, பக்கம் 172)

இதேபோல் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

காஜி முஹம்மது யூஸுஃப் ஸாஹிப் பெஷாவரி அவர்கள் கடிதம் மூலம் எனக்குத் தெரிவித்தார்கள்: ஆரம்ப காலத்தில் நான் காதியான் சென்றபோது, ஒரு நபர் தனது மகனை ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் முன்னிலையில் சந்திப்பிற்காக நிறுத்தினார். அந்த சிறுவன் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுடன் கை குலுக்குவதற்காக முன்னேறியபோது, மரியாதையை வெளிப்படுத்தும் விதமாக ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் பாதங்களைத் தொடுவதற்கு கையை நீட்டியபோது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய கரங்களால் அவரை அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தினார்கள். மேலும், அன்னாரின் முகம் (கோபத்தால்) சிவந்துவிட்டதை நான் கண்டேன். மேலும் அன்னார் (அலை) மிகுந்த ஆவேசத்துடன் கூறினார்கள்:

இறைத் தூதர்கள் உலகிற்கு ஷிர்க்கை அழிப்பதற்காகவே வருகின்றனர். எம்முடைய வேலையும் ஷிர்க்கை அழிப்பதே தவிர, ஷிர்க்கை நிலைநாட்டுவது அல்ல.(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 295, ரிவாயத் எண்: 319)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருவர் எனது புகைப்படத்தை எடுப்பதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

புகைப்படத்தைப் பொறுத்தவரை இங்கேயும் ஒரு தெளிவு கிடைத்து விடுகிறது. ஏராளமான தவறான வழிமுறைகளில் தமது புகைப்படங்களையும், மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் புகைப்படத்தையும், தங்களது உறவினர்களின் புகைப்படங்களையும் வைத்திருக்கின்றனர். எனவேதான் நான் இதை எடுத்துரைக்கிறேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவர் எனது புகைப்படத்தை எடுத்து, அதை சிலை வணங்கிகளைப் போல தம் வசம் வைத்திருப்பதையோ அல்லது வெளியிடுவதையோ நான் கடுமையாக எதிர்க்கிறேன். நான் ஒருபோதும் அவ்வாறு செய்வதற்கு கட்டளையிடவில்லை. உருவ வழிபாட்டிற்கும், புகைப்பட வழிபாட்டிற்கும் என்னை விடப் பெரிய எதிரி வேறு எவரும் இருக்க முடியாது. ஆனால், இன்றைய நாட்களில் ஐரோப்பிய மக்கள், எவருடைய நூலைப் பார்க்க விரும்புகின்றார்களோ, முதலில் அவருடைய புகைப்படத்தைப் பார்க்க விரும்புகின்றனர் என்பதை நான் கண்டுள்ளேன். ஏனெனில், ஐரோப்பிய நாடுகளில் அகப்பார்வை அறிவியல்' வளர்ச்சியடைந்துள்ளது. அவர்கள் பெரும்பாலும் புகைப்படத்தை மட்டுமே பார்த்து அடையாளம் கண்டு கொள்ள முடியும்;அவர்களில் பெரும்பாலார் அதாவது அவர்களில் பெரும்பான்மையான மக்கள் புகைப்படத்தை மட்டுமே பார்த்து, இத்தகைய வாதி உண்மையாளரா? அல்லது பொய்யரா?' என்று அடையாளம் கண்டு கொள்கின்றனர். மேலும், ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருப்பதன் காரணமாக அந்த மக்கள் என்னை வந்தடைய முடியாது. எனது முகத்தையும் பார்க்க முடியாது. எனவே, அந்த நாட்டின் அகப் பார்வை படைத்த மக்கள் புகைப்படத்தின் மூலமாக எனது அக நிலைகளை ஆராய்கின்றனர்.

ஐரோப்பா அல்லது அமெரிக்காவில் இருந்து எனக்கு கடிதங்கள் எழுதிய பல நபர்கள் இருக்கின்றனர். தங்களது கடிதங்களில் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளனர்:

'நாங்கள் தங்களுடைய புகைப்படத்தைக் கூர்ந்து கவனித்தோம். அகப் பார்வை அறிவின் மூலம் இந்தப் புகைப்படத்திற்குரியவர் பொய்யர் அல்ல' என்பதை எங்களுக்கு ஒப்புக் கொள்ள நேரிட்டது;

மேலும் அமெரிக்கப் பெண்மணி ஒருவர் எனது புகைப்படத்தைப் பார்த்துவிட்டு கூறினார்; அதாவது ஹஸ்ரத் 'மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த புகைப்படத்தைப் பார்த்து விட்டு, இவர் இயேசு, அதாவது ஈஸா (அலை) அவர்களின் புகைப்படமாகும்' என்று கூறினார். எனவே, இந்த நோக்கத்திற்காகவும், இந்த வழிமுறை பரவுவதில் உள்ள நன்மைகளைக் கருதியும் நான் அமைதி காத்தேன். இதனால்தான் புகைப்படம் எடுப்பதற்கு நான் அனுமதி அளித்துள்ளேன். இல்லையெனில் ஷிர்க் பரவினால் பின்னர் முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும்.

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்:

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. புகைப்படம் எடுப்பதற்கான தடை என்பது முற்றிலும் இறுதியானது என்பது எனது வழிமுறை அல்ல. 'புகைப்படம் எடுப்பது ஒரு ஹராமான செயலாகும் என்றும் நான் கூறவில்லை. ஹஸ்ரத் ஸுலைமான் (அலை) அவர்களின் சித்திரத்தை ஜின் கூட்டத்தினர் வடித்து வந்தனர் என்பதும், பனீ இஸ்ரவேலர்களிடம் நீண்ட காலம் வரை இறைத் தூதர்களின் சித்திரங்கள் இருந்துள்ளன என்பதும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகியுள்ளது. பனீ இஸ்ராயீலிடம் இறைத் தூதர்களின் சித்திரங்கள் இருந்தன. அவற்றில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சித்திரமும் இருந்தது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சித்திரம் ஒரு பட்டுத் துணியில் ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்களால் காட்டப்பட்டது. தண்ணீரில் சில கற்களின் மீது விலங்குகளின் உருவங்கள் இயற்கையாகவே பதிந்து விடுகின்றன. மலைகளில் பூகம்பங்கள் ஏற்படும் இடங்களில், அங்கு விலங்குகள் இறக்கும் போது அவற்றின் உருவங்கள் பதிந்து விடுகின்றன. மேலும், தற்போது எந்தக் கருவியின் மூலம் புகைப்படம் எடுக்கப்படுகிறதோ,

அதாவது 'கேமரா, அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. இது மிகவும் அவசியமான ஒரு

கருவியாகும். இதன் மூலம் சில நோய்களைக் கண்டறிய முடியும்.

எனவே, இது வெறும் புகைப்படம் எடுப்பது பற்றிய விஷயம் மட்டுமல்ல. மாறாக, அன்னார் (அலை) கூறினார்கள்:

இதன் மூலம் நோய்களையும் கண்டறிய முடியும். இப்போது இந்தத் துறை இன்னும் அதிகமாக வளர்ந்து விட்டது. அந்தக் காலத்திலோ எக்ஸ்ரே (X-ray) இருந்தது. அன்னார் (அலை) கூறினார்கள்:

மற்றொரு கருவி வந்துள்ளது. அதன் மூலம் மனிதனின் அனைத்து எலும்புகளின் புகைப்படமும் எடுக்கப்படுகிறது. எக்ஸ்ரேயின் மூலமாக. மூட்டு வலி மற்றும் வாத நோய் போன்ற நோய்களைக் கண்டறிவதற்காக, இந்த கருவியின் மூலம் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மேலும், நோயின் உண்மை நிலை அறியப்படுகிறது. தற்போதோ சிடி ஸ்கேனிங் (CT Scanning), எம்ஆர்ஐ (MRI) போன்ற இன்னும் பல விஷயங்கள் புழக்கத்திற்கு வந்திருக்கின்றன.

ஆக, இந்தக் கருவிகள் அந்தக் காலத்தில் எந்த அளவில் பயன்பாட்டில் இருந்ததோ, அவற்றைப் பற்றி அன்னார் (அலை) விளக்கமளித்து விட்டார்கள். இதுவோ மிகவும் பயனுள்ள கருவியாகும் என்று அன்னார் (அலை) கூறினார்கள். எனவே, அதற்கு முன்னால் முற்றிலும் செல்லக் கூடாது என்று கூறுவதும் தவறாகும். நோக்கம் நல்லதாக இருக்க வேண்டும். நோக்கம் சரியாக இருந்தால், பின்னர் அது சரியானதுதான். அதில் ஷிர்க் இருக்கக் கூடாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'இதேபோன்று புகைப்படத்தின் மூலம் பல அறிவார்ந்த நன்மைகளும் வெளிப்பட்டுள்ளன'. பொதுவாக எடுக்கப்படும் புகைப்படம் மூலமும் நன்மைகள் கிடைக்கின்றன.

ஆக, சில ஆங்கிலேயர்கள் புகைப்படத்தின் மூலம் உலகிலுள்ள அனைத்து உயிரினங்கள் எந்த அளவுக்கு என்றால், பல வகையான வெட்டுக் கிளிகளின் படங்கள் மற்றும் எல்லா வகையான பறவைகள் மற்றும் விலங்குகளின் படங்களை தங்களது புத்தகங்களில் அச்சிட்டுள்ளனர்'. 'மேலும், இன்றைய காலத்திலோ பல்வேறு சேனல்களும் இயங்கி வருகின்றன. உதாரணமாக, National Geographic இருக்கின்றது அல்லது இன்னும் சில சேனல்கள் இருக்கின்றன. விலங்குகளின் புகைப்படங்களை எடுத்து மிக விரிவாக அவற்றின் விபரங்களையும் அவை வழங்குகின்றன.

எவ்வாறிருப்பினும், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இதன் மூலம் அறிவு வளர்கின்றது. எனவே, மனிதனுக்கு அறிவைக் கற்கத் தூண்டுகின்ற அந்த இறைவன், எந்தக் கருவியின் மூலம் பெரும், பெரும் கடினமான நோய்கள் கண்டறியப்படுகின்றனவோ அந்தக் கருவியின் பயன்பாட்டை மேலும் எதன் மூலம் அகப் பார்வை கொண்ட மக்கள் நேர்வழி பெறுவதற்கான வழியாக இருக்குமோ அதனை ஹராம் ஆக்கியுள்ளான் என்று எண்ணம் கொள்ள முடியுமா என்ன?

இவை அனைத்தும் பரப்பப்பட்டுள்ள அறியாமைகளாகும்.. புகைப்படத்தை ஹராம் என்று கூறுவது தடைசெய்யப்பட்டுள்ளது; இதுவும் தவறானதாகும். ஆம்! எண்ணம் நல்லதாக இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நம் நாட்டின் மௌலவிகள் அரசியின் முகம் பொறிக்கப்பட்ட நாணயத்தின் பணம், எட்டணாக்கள் மற்றும் நாலணாக்களை தங்களது பைகள் மற்றும் வீடுகளிலிருந்து ஏன் வெளியே தூக்கி எறிவதில்லை?. இந்த மௌலவிகள் இவ்வளவு தீவிரத்தை விரும்பக் கூடியவர்கள் என்றால், பின்னர் அவர்களிடம் இந்த Coins இருக்கின்றன ; நாணயங்கள் உள்ளன ; மேலும் பணம் உள்ளது; ரூபாய் நோட்டுகள் இருக்கின்றன ; அவற்றில் அரசர்களின் படங்கள் அச்சிடப்பட்டுகின்றன;அவர்கள் அவற்றை வீடுகளிலிருந்து ஏன் வெளியே தூக்கி எறிவதில்லை? ஏன் தங்கள் சட்டப்பைகளில் வைத்துக்கொண்டு திரிகிறார்கள்?. அந்த நாணயங்களில் படங்கள் இல்லையா?'. இந்த நபர்கள் பகுத்தறிவிற்குப் புறம்பான ஆகுமற்ற விஷயங்களை பேசி, எதிரிகளுக்கு இஸ்லாத்தைப் பார்த்து எள்ளி நகையாடுவதற்கான வாய்ப்பை வழங்குகிறார்கள் என்பது வேதனைக்குரியதாகும். இஸ்லாம் அனைத்து வீணான காரியங்களையும், ஷிர்க்கை ஊக்குவிக்கும் காரியங்களையும் ஹராமாக்கியுள்ளதே தவிர, மனித அறிவை வளர்க்கக் கூடிய பணிகளை, நோய்களைக் கண்டறிவதற்கு ஊடகமாக இருக்கும் விஷயங்களை, மேலும் அகப் பார்வை கொண்டவர்களை நேர்வழியை நோக்கி நெருங்கச் செய்யக் கூடிய காரியங்களை அது தடை செய்யவில்லை.

இருப்பினும், இவற்றுடன் சேர்த்து, எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள், கட்டாயமான தேவை இருக்கும் நிலையைத் தவிர்த்து மற்றபடி எனது புகைப்படத்தை பொதுவாக பரப்புவதோ அல்லது தொழிலாகவோ வாழ்வாதாரமாகவோ மாற்றிக் கொள்வதை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. நோக்கம் நல்லதாக இருந்தால் சரிதான். அந்தப் புகைப்படங்களை சம்பாதிப்பதற்கான ஒரு வழிமுறையாக ஆக்கிக் கொள்ளக் கூடாது.' ஏனெனில் இதன் மூலம் படிப்படியாக பித்அத்கள் உருவாகி விடுகின்றன ; ஷிர்க் வரை சென்றடைந்து விடுகின்றன. எனவே, எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்கு நான் இந்த இடத்திலும் அறிவுரை கூறுகிறேன், முடிந்தவரை அவர்கள் இத்தகைய காரியங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

சில நபர்களின் கார்டுகளை நான் பார்த்திருக்கிறேன், அவற்றின் பின்புறத்தின் ஓரத்தில் எனது புகைப்படத்தை வைத்துள்ளனர். நான் இத்தகைய வெளியீட்டிற்கு முற்றிலும் எதிரானவன் ஆவேன். எமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒருவர் இத்தகைய செயலில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை. ஒரு சரியான மற்றும் பயனுள்ள நோக்கத்திற்காக வேலை செய்வது என்பது வேறு விவகாரம் ஆகும். இந்துக்களைப் போன்று தங்களது முன்னோர்களின் படங்களை ஆங்காங்கே சுவர்களிலும் கதவுகளிலும் மாட்டி வைப்பதை வேறு விஷயமாகும். 'இது போன்ற வீணான விஷயங்கள் மனிதனை இணைவைப்பவனாக மாற்றிவிடுகின்றன. அதாவது ஷிர்க்கை நோக்கி அழைத்துச் செல்லக் கூடியவையாக இருக்கின்றன' என்று எப்போதும் பார்க்கப்பட்டுள்ளது. 'மேலும் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடம் பித்அத்கள் உருவாகியதைப் போன்று, இவற்றால் பெரும் பெரும் சீர்கேடுகள் உருவாகின்றன, மேலும் எந்த நபர் எனது அறிவுரைகளை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் பார்க்கின்றாரோ, மேலும் எந்த நபர் என்னை உண்மையாக பின்பற்றுபவராக இருக்கின்றாரோ, அவர் இந்த கட்டளைக்குப் பிறகு இத்தகைய செயல்களிலிருந்து விலகியிருப்பார் என்று நான் நம்புகிறேன். இல்லையெனில், அவர் எனது அறிவுரைகளுக்கு எதிராகத் தன் விருப்பப்படி செயல்படுகிறார். மேலும் ஷரீஅத்தின் பாதையில் அவமரியாதையுடன் கால் வைக்கிறார்.' (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 365 முதல் 367 வரை)

எனவே, நாம் புகைப்படம் வைப்பதன் நோக்கம் என்ன? என்பதை நாம் மிக ஆழமாகப் பார்க்க வேண்டும், எந்த வகையிலும் இந்த நோக்கம் ஷிர்க்கை நோக்கி இட்டுச் செல்வதாக இருக்கக் கூடாது. படங்களுக்கு ஸலாம் கூறுவது, அவற்றின் முன் குனிவது, இவை யாவும் இணைவைப்பிற்குரிய சிந்தனைகள் ஆகும்.

இந்துக்களிடம் இதுவே நடக்கிறது. சில நபர்கள் இறந்துபோனவர்களின் பழைய படங்களை சுவரில் மாட்டி வைத்திருக்கின்றனர். மேலும் அத்துடன் அவற்றின் மீது மாலையை தொங்க விடுகின்றனர். இங்கும், நமக்குள்ளும் கூட சில இடங்களில் இந்த வழக்கம் இருக்கின்றது. அதாவது குடும்பத்தினரின் குரூப் போட்டோ எடுக்கின்றனர். அப்போது, சிலர் இறந்துபோன தங்களது அன்பர்களின் புகைப்படங்களை ஒரு பெரிய பிரேமில் தம்முடன் சேர்த்து வைத்துக் கொள்கின்றனர்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அதாவது 'இவர்கள் இறந்துபோன எங்களது முன்னோர்கள்; இது அவர்களின் புகைப்படம் ஆகும் ;அவர்களும் எங்களுடன் சேர்ந்து விட்டனர் என்று கருதுகின்றனர். இவை அனைத்தும் ஷிர்க் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'இவை தவறான விஷயங்களாகும், இவை பித்அத்கள் ஆகும், இவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். சில நபர்கள் திருமணப் புகைப்படங்களையும் இவ்வாறு எடுத்துக் கொள்கின்றனர் என்று சில அறிக்கைகள் எனக்குக் கிடைக்கின்றன'.

நல்ல நோக்கத்திற்காக மட்டுமோ அல்லது அவர்களது நினைவாக தங்களது ஆல்பத்தில் வைப்பதற்காகவோ புகைப்படங்களை எடுத்துக் கொள்கின்றனர் என்றால் பின்னர் அது ஆகுமானதாகும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியுள்ளது போன்று. அதனை ஒரு பித்அத்தாக மாற்றுவது மற்றும் அதை சுவரில் மாட்டி மட்டும் வைத்து அதனை பார்ப்பது, காலையில் எழுந்து வணக்கம் செலுத்துவது போன்ற இந்த விஷயங்கள் அனைத்தும் தவறானவையாகும்.

ஹஸ்ரத் ஸூஃபி குலாம் முஹம்மது ஸாஹிப் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நாங்கள் வாதியான மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்க்க விரும்புகிறோம் என்று 'அமெரிக்கா மற்றும் இதர வெளிநாடுகளைச் சேர்ந்த சில நபர்கள் ஆசைப்பட்டனர். எனவே ஹுஸூர் (அலை) அவர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டது. இங்கு அப்துல் ஹைய் என்ற அரபு நாட்டைச் சேர்ந்த ஒருவர் வசித்து வந்தார். அவர் பல கார்டுகளை அச்சிட்டார். மேலும், அதில் ஹுஸூர் (அலை) அவர்களின் புகைப்படமும் இருந்தது. அதில் புகைப்படத்தை அச்சிட்டு விட்டார். கார்ட்களில் அச்சிடப்பட்டுள்ளது ; போஸ்ட் கார்டுகளில் அச்சிடப்பட்டுள்ளது என்ற விபரம் 'ஹுஸூர் (அலை) அவர்களுக்கு தெரிய வந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் கோபமடைந்தார்கள்.

மேலும் கூறினார்கள்: 'நாம் ஒரு மார்க்கத் தேவைக்காக எமது புகைப்படத்தை அல்லது ஃபோட்டோவை எடுக்க அனுமதித்திருந்தோம். ஆனால், எமது புகைப்படத்தை வாழ்வாதாரத்திற்கான வழிமுறையாக மாற்றுவதை நாம் மிகவும் வெறுக்கிறோம்'. அது மனிதனை இணைவைப்பின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடியதாக ஆகி விடும்.

எனவே, அந்த கார்டுகள் அழிக்கப்பட்டு விட்டன. (ரிவாயாத் அஸ்ஹாப் அஹ்மத், பாகம் 3, பக்கம் 408)

ஹஸ்ரத் மௌலானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜீகீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தபோது, ஹுஸூர் அக்தஸ் (அலை) அவர்களின் தூய சமூகத்தில் இவ்வாறு எழுதினேன்:

'நான் இன்ன இன்ன சில வகையான வஸீஃபாக்களை (திக்ருகளை) ஓதி வருகிறேன்; மேலும் கூறினேன்:

நான் பைஅத் செய்ததிலிருந்து எனக்கு இந்த எண்ணம் இருந்து வருகிறது. அதாவது, எதிர்தரப்பினர் தமது பீர் (ஆன்மிக குரு) கூறியதன்படி அவரை மனதில் உருவகப்படுத்தி தியானிக்கின்றனர். ஒரு சாதாரண பீர்மார்களின் சீடர்கள் தங்கள் குருவை தியானிக்கும் போது, இறைவனால் அனுப்பப்பட்ட எனது தலைவரும், வழிகாட்டியும், இறைவனின் மஸீஹ் மவ்வூத் மற்றும் இமாம் மஹ்தியுமான தங்களை எனது ஒவ்வொரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக நான் என் மனதில் எண்ணி ஏன் தியானிக்கக் கூடாது?

அதாவது, கற்பனையில் எனது உள்ளத்தில் ஓர் உருவத்தை நிறுத்தி, பின்னர் ஒவ்வொரு நாளும் அந்த உருவத்தை வைத்து எனது எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யலாம் என எண்ணுகிறேன்.

தங்களின் அந்தஸ்தோ இந்த அனைத்து பீர்மார்களின் அந்தஸ்தை விட மிகவும் அருளுக்குரியதாகவும், பயனளிக்கக் கூடியதாகவும், உகந்ததாகவும் இருக்கும்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: தாங்களோ மஸீஹ் மவ்வூத் (அலை) ஆவீர்கள். மேலும் மற்ற பீர் ஃபக்கீர்மார்களைக் குறித்து அது ஆகுமானதா? இல்லையா? என்பது தெரியாது. அவர்களின் உருவத்தை மக்கள் எடுத்துக் கொண்டு திரிகின்றனர். எனவே, நான் ஏன் தங்களின் உருவத்தை எப்போதும் எனது உள்ளத்தில் ஏந்திக் கொண்டு இருக்கக் கூடாது?

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்தில் நான் இந்தக் கடிதத்தை எழுதினேன்.

ராஜீகீ ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆக, ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்களின் கரத்தால் எழுதப்பட்ட கடிதம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தரப்பிலிருந்து கிடைத்தது. அதில் இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன:

படைப்பினங்களை தியானிப்பது என்பது ஷிர்க்கைத் தவிர வேறு எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

' நீங்கள் செய்யும் இந்தத் தியானத்தால் ஷிர்க்கைத் தவிர வேறு எதுவும் உருவாகாது.

**அல்லாஹ்வை தியானம் செய்ய அல்லாஹ்வின் திருநாமமே போதுமானதாகும். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தின் மீது முத்திரை பதிக்கும் துரூத் ஷரீஃப் ஓதப்பட வேண்டும்.**

இந்த மேலான கடிதம் கிடைத்த உடனேயே, நான் அந்த உருவத் தியானத்தைக் கைவிட்டு விட்டேன், மேலும் அத்துடன் முந்தைய அனைத்து வஸீஃபாக்களையும் உடனடியாக நிறுத்திவிட்டேன். (ரிவாயாத் அஸ்ஹாப் அஹ்மது, பாகம் 4, பக்கம் 329-330)

ஹஸ்ரத் மாஸ்டர் ஸய்யிது நஸீர் அஹ்மது ஸாஹிப் கூறுகின்றார்கள்:

'மறைந்த ஸய்யிது ஃபஸல் ஷாஃ ஸாஹிப் மர்ஹூம் முஹாஜிர் காதியான் அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

ஒருமுறை ஒரு நண்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் (ரசவாதம்/தங்கம் தயாரிக்கும் கலை) வேதியியல் சூத்திரத்தைக் குறித்துக் கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த ரசவாதிகள் வாழ்வாதாரத்தைத் தேடி அலைந்து திரிகிறார்கள். அல்லாஹ் பொதுவாக மனிதர்களின் வாழ்வாதாரத்திற்காக நிர்ணயித்துள்ள ஆகுமான வழிமுறைகளை அவர்கள் பயன்படுத்துவதில்லை. ரசவாதிகள் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கு உண்மையான இறை நம்பிக்கை ஏற்படுவதில்லை. அவர்கள் முறையான மற்றும் ஹலாலான வழிகளை விடுத்து, தங்களுக்கு என்று ஒரு பாதையை சுயமாக உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

மேலும்,

فِي السَّمَاءِ رِزْقُكُمْ وَمَا تُوعَدُونَ

என்று அல்லாஹ் கூறுவதை அவர்கள் அறிவதில்லை.

பொருள்: 'வானத்தில் தான் உங்களுக்கான வாழ்வாதாரமும், உங்களுக்கு வாக்களிக்கப்பட்டவைகளும் இருக்கின்றன' (அஸ்ஸாரியாத்: 23)

நாமோ (இதனை அறியாத) அத்தகைய நற்பேறு இழந்தவர்களை மாபெரும் இணைவைப்பாளராக கருதுகின்றோம். இறைவன் தனது புனித நூலான திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களுக்கு ஒரு வேதியியல் சூத்திரத்தைக் கற்றுக் கொடுத்துள்ளான். அதன்படி செயல்பட்டால், அல்லாஹ்வோ தான் வாக்குறுதி அளித்தபடி வானத்திலிருந்து வாழ்வாதாரத்தை வழங்குகிறான். ஆனால், அது அவன் பக்கம் குனிபவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது.'

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள் :

நம்பிக்கையாளருக்கு ஒரு வேதியியல் சூத்திரம் கூறப்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்தும் போது ஒவ்வொரு மனிதனும் உண்மையான வேதியியல் வாதியாக மாறிவிடுகிறான், மேலும், இறைவன் அவரது ஒவ்வொரு தேவையையும் சுயமே நிறைவேற்றி வருகின்றான்.

ஆக, அல்லாஹ் கூறுகிறான்:

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ்கிறாரோ, அவருக்கு அவன் ஒரு வழியை ஏற்படுத்துகிறான். மேலும், அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறான்.' (அத்-தலாக்: 3-4)

கவனமாகப் பாருங்கள்! இறையச்சமுடையவருக்கு

அனைத்துலகின் அருட்கொடைகளும் வழங்கப்படுகின்றபோது, பின்னர் அவருக்கு வேறு எவருடைய தேவை இருக்க முடியும்? யார் இறையச்சத்தை மேற்கொள்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் அத்தகைய ஏற்பாடுகளை உருவாக்கி விடுகிறான். அவர் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத இடங்களிலிருந்து வாழ்வாதாரத்தை வழங்குகிறான்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: எந்த இறையச்சமுடையருக்கு உலகத்தின் அருட்கொடைகள் கிடைத்து விடுகின்றதோ பின்னர் அவருக்கு எவருடைய தேவை இருக்கப் போகிறது?'

நான் கூறுகிறேன்; அந்த வேதியியல் கலையில் தங்களது நேரத்தை வீணடிக்கக் கூடியவர்கள், தங்களைப் படைத்தவனுக்காக அந்த நேரத்தைச் செலவிட்டால், தங்களின் அனைத்து விருப்பங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவர்கள் இறையச்சத்தில் சரியான முறையில் நிலைபெற்று விட வேண்டும். (ரிவாயாத் அஸ்ஹாப் அஹ்மத், பாகம் 3, பக்கம் 179)

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் ஏகத்துவத்தின் கூற்றும், அதற்கான அன்னாரின் செயல்களும் நல்லியல்பு படைத்த மக்கள் மீது எவ்வாறு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின? என்பது குறித்து ஒரு தூய சான்றோரின் அறிவிப்பை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்:

மீர் அப்துர் ரஹ்மான் ஸாஹிப் ரேஞ்ச் ஆஃபீஸர் பாரமூலா காஷ்மீரி அவர்கள் கடிதம் மூலம் என்னிடம் எடுத்துரைத்தார்கள்: எனது தந்தையார் முதலில் ஹனஃபி பிரிவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். பின்னர் அஹ்லே ஹதீஸ் பிரிவில் சேர்ந்து விட்டார்கள். அந்த நேரத்தில், அன்னார் ஆஸ்னூர் பகுதியைச் சேர்ந்த மறைந்த தனது நண்பர் மௌலவி முஹம்மது ஹஸன் ஸாஹிப் மர்ஹூமிடம் இவ்வாறு கூறிவந்தார்கள்: 'இப்போது நாம் பெரிய ஏகத்துவ வாதிகளாக வாதிடுகின்றோம். ஆனால், நம்மை இணைவைப்பாளர்கள் என்று கூறக் கூடிய வேறொரு ஜமாஅத் வருவதும் சாத்தியமாகும். தந்தையார் கூறிவந்தார்கள்: ஆக, அவ்வாறே நிகழ்ந்தது. ஏனெனில் நாமும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பித்தார்கள்; பறவைகளைப் படைத்தார்கள் என்று நம்புகிறோம். ஆனால், எனது காதுகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த கவிதை வரிகள் விழுந்த போது:

ஹே வஹி அக்ஷர் பரிந்தோன் கா குதா . இஸ் குதா தானி பே தேரே மர்ஹபா

மௌலவி ஸாஹிப்! யஹீ தவ்ஹீத் ஹே. ஸச் கஹோ கிஸ் தேவ்கி யே தக்லீத் ஹே?

பொருள்: பறவைகளின் உண்மையான இறைவன் அவன் ஒருவனே; உமது இந்த இறை ஞானத்திற்கு வாழ்த்துகள்! மௌலவி ஸாஹிப்! இதுவே உண்மையான தவ்ஹீத் ஆகும்; உண்மையைச் சொல்லுங்கள், இது எந்த தெய்வத்தின் பின்பற்றுதல்?

அந்த கணமே எனக்குப் புத்தி வந்தது. நான் உங்கள் இரு சகோதரர்களையும் ஸ்ரீநகரில் உள்ள எனது மாமாவின் வீட்டில் விட்டுவிட்டு, காதியானை நோக்கி கால்நடையாகப் புறப்பட்டுச் சென்றேன். 'அங்கு பைஅத் செய்யும் நற்பேறு பெற்றேன். 'இதே விஷயம் எனக்கு பிரச்சாரமாக அமைந்து விட்டது.

(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 160-161, அறிக்கை 1229)

ஹஸ்ரத் மௌலானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜீகி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'அனேகமாக 1901-ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவமாகும். ஒருமுறை, ஹுஸூர் அக்தஸ் (அலை) அவர்களின் புனிதமான அவையில் நான் இருந்தபோது, அன்னார் (அலை) அல்லாஹ்வின் ஏகத்துவம் குறித்து ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் கூறினார்கள்: சில நபர்கள் இருக்கின்றனர். அவர்கள் எவரேனும் தங்களுக்கு நன்மை செய்தால் அதற்கு 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் இறைவனுக்கே) என்று கூறாமல் நேரடியாக 'ஜஸாகல்லாஹ்' (அல்லாஹ் உமக்கு நற்கூலி வழங்குவானாக) என்று கூறிவிடுகின்றனர். அவ்வாறு கூறுவது பார்ப்பதற்கு நன்றியறிதலாகத் தெரிந்தாலும், இறை ஞானத்தின் பார்வையில் அதற்குள் ஒரு வகையான 'ஷிர்க்' மறைந்துள்ளது. ஏனெனில், நன்மை செய்த நபரின் இருப்பும், எந்த விஷயத்தின் மூலம் அவர் நன்மை செய்பவராக ஆனாரோ அதுவும், உண்மையில் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட விஷயங்களே ஆகும். எனவே, பயனடைந்தவர் 'ஜஸாகல்லாஹ்' என்று கூறுவதற்கு முன்பாக, இறைவனைப் போற்றித் துதித்து, அந்த நன்மைக்காக முதலில் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூற வேண்டும். ஏனெனில், இறைஞானம் மற்றும் யதார்த்தத்தின் அடிப்படையில், முதலில் காரணிகளைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும். அதன் பிறகு, அந்த நபருக்கும் 'ஜஸாகல்லாஹ்' என்று கூறிக் கொள்ளலாம். '(ஹயாத்தே குத்ஸி, பக்கம் 134)

ஹஸ்ரத் பாய் அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறுதிப் பயணமான லாகூர் பயணத்தின் விபரங்கள் அடங்கிய ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பொழுது விடிந்ததும், ஏற்பாட்டாளர்கள் விருந்திற்கான ஏற்பாடுகளைத் தொடங்கினர். கௌரவமிக்க விருந்தினர்கள் மற்றும் மரியாதைக்குரிய பிரமுகர்களின் வாகனங்கள் வரத் தொடங்கின. ஆனால், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் உடல்நிலை, அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அங்கு சொற்பொழிவு நிகழ்த்த இருந்தார்கள்; ஆனால், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் உடல் நிலை இன்னும் பலவீனமாகவும், சோர்வாகவும் இருந்தது. பலகீனம் மற்றும் சோர்வின் நிலை எவ்வாறிருந்தது என்றால், இந்த நிலையில் ஹுஸூர் (அலை) அவர்கள் எழுந்து நின்று உரை நிகழ்த்துவார்கள் என்ற எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. இதே எண்ணத்தில், தாங்களே வரக் கூடிய விருந்தினர்களுக்கான ஆன்மிக விருந்திற்கான சில ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் கட்டளையிட்டார்கள். அதன்படி, ஹஸ்ரத் மௌலவி ஸாஹிப் (ரலி) அவர்கள் குறித்த நேரத்தில் உரையாற்றத் தொடங்கி விட்டார்கள். ஆனால், சிறிது நேரத்திலேயே அந்தப் பொன்னான சூரியன், ஒளிமயமான கதிரவன் உதித்தது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சிறிது நேரத்திற்குப் பிறகு வருகை தந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மௌலவி ஸாஹிப் (ரலி) அவர்கள் தம் உரையை நிறுத்தி விட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் எழுந்து நின்று, கூடியிருந்தவர்களிடம் சுமார் 2 முதல் 3 மணி நேரம் வரை மிகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும், ஆற்றல்மிக்கவராகவும் உரையாற்றினார்கள். நோயின் நிலை எப்படி இருந்தது என்றால், அங்கு வருகை தருவதே கடினமாக இருந்தது. அந்த நிலை எங்கே? அதேநேரம், அன்னார் (அலை) அங்கு வந்து இரண்டு, மூன்று மணி நேரம் இறைஞானம் நிறைந்த உரையை நிகழ்த்தினார்கள். அதை நம்மவர்கள் மட்டும் அல்ல அந்நியர்களும் கூட மிகவும் உற்சாகமாகவும், உன்னிப்பாகவும் கேட்டுக் கொண்டிருந்தனர். எந்த அளவிற்கு என்றால் அவர்கள் மெய்மறந்து போயிருந்தனர்; மேலும், அந்த ஆன்மீக உணவின் சுவையை எவ்வாறு உணர்ந்தனர் என்றால், அது பௌதீக உணவின் தேவையை இல்லாமல் செய்துவிட்டது.

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் உரையில் எத்தகைய ஒரு சரளம் இருந்தது என்றால், அதன் குறிப்பெடுப்பது கடினமாக இருந்தது; உரையில் எவ்வளவு வலிமையும், கம்பீரமும் இருந்ததென்றால், அத்தனை பெரிய கூட்டத்தில் எவருடைய மூச்சின் அசைவையும் கூட உணராமல் இருந்தனர். மேலும், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் மிகுந்த உத்வேகத்துடன் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். உரையின்

வேகத்தோடு சேர்ந்து, ஹுஸூர் (அலை) அவர்களும் சபையோரை நோக்கி முன்னோக்கி நகர்ந்து கொண்டே இருந்தார்கள்.

நான் என் சொந்தக் கண்களால் கண்டேன். மேலும் இந்த விஷயத்தை நன்கு கவனித்தேன். அதாவது ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் பலமுறை மேஜையிலிருந்து சில சில அடிகள் முன்னால் சென்றுக் கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் மேஜையை முன்னால் எடுத்துக் கொண்டு நிற்கவில்லை. மாறாக, மேஜை அன்னாருக்குப் பின்னால் இருந்தது. அதாவது, அங்கு போடப்பட்டிருந்த மேஜைக்குப் பின்னால் அன்னார் (அலை) நின்று கொண்டு உரை நிகழ்த்தவில்லை. மாறாக அன்னார் (அலை) முன்னால் நின்று கொண்டு உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அதனால், உரையின்போது ஆவேசத்தில் அவர்கள் ஓரிரு அடிகள் முன்னோக்கிச் சென்றுவிட்டார்கள்.‘ ‘ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் இந்த உரையானது டாக்டர் ஸய்யிது முஹம்மது ஹூஸைன் ஷாஃ ஸாஹிப் (ரலி) அவர்களின் வீட்டின் முற்றத்தில், ஹஸ்ரத் அவர்களின் மறைவுக்குச் சுமார் பத்து நாட்களுக்கு முன்பு நிகழ்ந்தது.‘ ‘இதற்கு ‘தக்மீலே தப்லீஃக் மற்றும் இத்திமாமே ஹூஜ்ஜத்’ என்ற பெயரால் நினைவு கூர்ந்து வந்தார்கள். மேலும், வானியல் நிபுணரான ஓர் ஆங்கிலேயருடனான உரையாடல், காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களின் வீட்டின் மேல் மாடியில் இதற்கு முன்பே நடந்து முடிந்திருந்தது. அதாவது, அது ஒரு பெரிய தப்லீஃக் வகையிலான பயணமாக இருந்தது.‘ ‘இந்த உரைகள் தவிர, வேறு சில சிறிய உரைகளையும் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அடுத்து அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: ‘இதே காலகட்டத்தில் 'பைகாமே ஸூல்ஹ்' (சமாதானத் தூது) என்ற நூல் எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோது, சில இந்துப் பெண்கள் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களைச் சந்திப்பதற்காக ஒரு குழுவாக வந்திருந்தனர். அப்போது ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் டாக்டர் ஸய்யிது முஹம்மது ஹூஸைன் ஷாஃ ஸாஹிப் (ரலி) அவர்களின் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் மிகவும் பிஸியாக இருந்ததார்கள்; அவர்களுக்கு விரைவில் விடைகொடுக்க விரும்பினார்கள், ஆனால், அந்தப் பெண்கள் சாக்குப் போக்குகளைக் கூறினர்; மேலும் அழுத்தம் கொடுத்தனர். மேலும், ஏதேனும் அறிவுரை வழங்குவதற்கான விண்ணப்பத்தை எந்த வடிவில் செய்தனர் என்றால், அதனைக் கண்டு ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தமது கடுமையான வேலைப் பளுவுக்கு மத்தியிலும் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டவாறு. இறைவனின் ஏகத்துவத்தை போதித்தார்கள். மேலும், சிலை வழிபாட்டிலிருந்து தடுத்தார்கள். மேலும், இறைவனிடம் துஆ மற்றும் பிரார்த்தனை செய்யுமாறும் வலியுறுத்தினார்கள்.

இந்த நிகழ்வு முற்றிலும் கடைசி ஓரிரு நாட்களில் நிகழ்ந்ததாகும். உண்மையில் அந்தப் பெண்கள் நீண்ட நேரம் தங்கி, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் புனித நாவிலிருந்து இன்னும் பல விஷயங்களைக் கேட்க விரும்பினர். ஆனால், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தமது கடுமையான வேலைப் பளுவின் காரணமாக, அந்தப் பெண்மணிகளை கனத்த இதயத்துடன் விரைவாகவே விடை கொடுத்து அனுப்பி வைத்தார்கள். இதேபோல் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் மற்றோர் உரையில் இடம்பெற்ற சில வாக்கியங்களின் காரணமாக மேலும், இறுதியானதாக இருப்பதன் காரணமாக குறிப்பாக பிரபலமாகி, மக்களின் நாவுகளில் எப்போதும் புழங்கின. அதில் ஹுஸூர் (அலை) அவர்கள் பின்வருமாறு கூறியிருந்தார்கள்:

ஈஸா மஸீஹை மரணிக்க விடுங்கள்; அதில் தான் இஸ்லாத்தின் வாழ்வு இருக்கிறது.

முஹம்மதிய மஸீஹை வர விடுங்கள்; அதில் தான் இஸ்லாத்தின் மேன்மை இருக்கிறது.’

(ததிம்மா ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 391-394)

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

இது அன்னார் (அலை) ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக கொண்டிருந்த துடிப்பாக இருந்தது. நோய் மற்றும் வேலைப்பளு இருந்தபோதிலும், இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும், ஏகத்துவத்தின் செய்தியையும் கொண்டு சேர்ப்பதில் அன்னார் (அலை) எந்த விஷயத்தையும் பொருட்படுத்தவில்லை.

எனவே, இந்த தவ்ஹீதின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதும், அதைத் தமது வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாற்றுவதற்குமான முழுமையான முயற்சியுமேதான், இன்று முஹம்மதிய மஸீஹின் அடிமைகளுடைய பணியாக இருக்கிறது. அல்லாஹ் தஆலா இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான நற்பேறை நமக்கு வழங்குவானாக!

உலகின் நிலைமைகள், மற்றும் குறிப்பாக முஸ்லிம் உலகின் நிலைமைகளுக்காக அதிகமாக துஆ செய்வது அவசியமாக இருக்கிறது.

என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்பது அனைவருக்கும் தெரியும். பெயர் அளவில் போர்நிறுத்தம் நிகழ்ந்துள்ளது, ஆனால் இது நீண்ட காலத்திற்கானதாக தென்படவில்லை, மாறாக இப்போதிருந்தே இதில் விரிசல்கள் விழத் தொடங்கிவிட்டன. எப்படியாவது லெபனான் மீது தாக்குதல் நடத்தி, ஈரானியர்களைத் தூண்டிவிட்டு, அவர்களைப் பதிலடி கொடுக்க வைக்க இஸ்ரேலிய அரசு முயற்சி செய்கிறது. இப்பொழுது சில ஐரோப்பியத் தலைவர்களும் கூட இந்தச் செயலைக் கண்டித்துள்ளனர். குறைந்தபட்சம் யாராவது குரல் எழுப்பியுள்ளார்களே! இந்த மக்கள் ஏதோ ஓரளவிற்குத் தார்மீக ஒழுக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் இத்துடன் நின்று விடுவார்கள். இவர்களிடம் இவ்வளவுதான் தார்மீகப் பொறுப்பு உள்ளது. இதை விட அதிகமாக அவர்கள் முயற்சி செய்யவும் விரும்பவில்லை, அதற்கான துணிச்சலோ அல்லது சக்தியோ அவர்களிடம் இல்லை. எது எப்படியாயினும் நாம் துஆ செய்ய வேண்டும், அல்லாஹ் தஆலா முஸ்லிம் உலகின் மீது கருணை புரிவானாக!

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 1 மே 2026, பக்கம் 2 முதல் 8 வரை இல் பிரசுரிக்கப்பட்டது)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

2 - ம் பக்கத் தொடர்ச்சி.........
(தலையங்கம்)

வலியுறுத்தியுள்ளார்கள். அவை இங்கு ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஒரு நினைவூட்டலுக்காக பதிவு செய்யப்படுகின்றன.

இந்த உரையாடலின் இறுதியில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 'திக்ரே இலாஹி' என்ற புத்தகத்திலிருந்து, இறை தியானத்தின் நன்மைகளின் சுருக்கம், அன்னாரின் அருளுக்குரிய எழுத்துக்களிலிருந்து பயனடைந்தவாறு, அல்லாஹ் தஆலா நம்முடைய அன்பான இமாமின், திக்ரே இலாஹி தொடர்பான இந்த அருளுக்குரிய திட்டத்தின்படி முறையாகச் செயல்பட நம் அனைவருக்கும் நற்பேறு வழங்குவான் என்ற இந்த நம்பிக்கையுடன் இங்கே பதிவு செய்யப்படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘ இப்போது நான் திக்ரே இலாஹியின் சில நன்மைகளைக் கூறுகிறேன். எல்லாவற்றையும் விடப் பெரிய நன்மை என்னவென்றால், இறைவனை நினைவுகூர்வதன் மூலம் அல்லாஹ் தஆலாவின் திருப்தி கிடைத்துவிடுகிறது.

இரண்டாவது நன்மை: உள்ளத்திற்கு அமைதி கிடைக்கிறது.

மூன்றாவது நன்மை: அல்லாஹ் தஆலா தன் அடியானைத் தன் நண்பனாக்கிக் கொள்கிறார்.

நான்காவது நன்மை: இறைவனை நினைவுகூருபவர் தீமைகளிலிருந்து விலகி

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 04 JUNE 2026 Issue No. 23

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

விடுகின்றான்.

ஐந்தாவது நன்மை: இதயம் வலிமையடைகிறது.

ஆறாவது நன்மை: இறைவனை நினைவுகூருபவர், அவர் உண்மையான இதயத்தோடு நினைவுகூரும் பட்சத்தில், ஒவ்வொரு நோக்கத்திலும் வெற்றியடைகிறார்.

ஏழாவது நன்மை: இறைவனை நினைவுகூருபவருக்குக் கியாமத் நாளில் அல்லாஹ் தஆலாவின் நிழல் கிடைக்கும்.

எட்டாவது நன்மை: துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

ஒன்பதாவது நன்மை: பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

பத்தாவது நன்மை: புத்தி கூர்மையடைகிறது, மேலும் ஆன்மீக அறிவும், நுணுக்கங்களும் வெளிப்படுகின்றன.

பதினோராவது நன்மை: இறையச்சம் ஏற்படுகிறது.

பன்னிரண்டாவது நன்மை: இறைநேசம் அதிகரிக்கிறது.'

அன்னார் (ரலி) கூறினார்கள்: 'இவை இறை தியானத்தின் நன்மைகளாகும். இவற்றை நான் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். அல்லாஹ் தஆலா உங்கள் அனைவரையும், என்னையும் இதிலிருந்து பயனடையச் செய்ய வேண்டும் என்று துஆ செய்கிறேன். (ஆமீன்!)

(ஆதாரம்: அன்வாருல் உலூம், தொகுதி 3, சுருக்கம், பக்கம் 534 முதல் 538 வரை)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

**1 - ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்).......**

கூறுவதைப் போல, நீங்களும் மீண்டும் மீண்டும் அல்லாஹ்வை நினைவு கூர வேண்டும். அதன் மூலம் அவனுடைய அன்பு உங்கள் நரம்புகளிலும், சதைகளிலும் ஊடுருவிச் சென்று விட வேண்டும். அல்லாஹ் என்பவன் அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு உன்னதமான ஆற்றல் ஆவான்.

இறைவன் கற்பனைக்கு அப்பாற்பட்டவன் ஆவான். அவனுடைய அழகு மனிதனுக்கு நேரடியாகத் தெரிவதில்லை, மாறாகப் பல ஊடகங்களின் மூலமாகவே வெளிப்படுகிறது. அவனுடைய அழகு வார்த்தைகளில் எடுத்துரைக்கப்பட்டால், பின்னர் நாம் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தால், பின்னர் மெது மெதுவாக அவனது முகம் நம் கண் முன்னே வந்து விடுகின்றது.

நீங்கள் 'மாலிக்' (அதிபதி) என்ற பெயரை நினைவுகூர்ந்து அவனுடைய உடைமையுரிமையை மனதில் கொண்டு வாருங்கள். 'குத்தூஸ்' (தூய்மையானவன்) என்ற பெயரை நினைவுகூர்ந்து அவனுடைய பரிசுத்தத்தன்மையை மனதில் கொண்டு வாருங்கள். 'ஸத்தார்' (குறைகளை மறைப்பவன்) என்ற பெயரை நினைவுகூர்ந்து அவனுடைய குறைகளை மறைக்கும் பண்பை மனதில் கொண்டு வாருங்கள். 'கஃபூர்' (மிகவும் மன்னிப்பவன்) என்ற பெயரை நினைவுகூர்ந்து அவனுடைய மன்னிக்கும் தன்மையை மனதில் கொண்டு வாருங்கள்.

இவ்வாறு செய்யும்போது, மெதுவாக அல்லாஹ்வைப் பற்றிய ஒரு முழுமையான தோற்றம் நிச்சயமாக உங்கள் முன்னால் வந்து விடும். மேலும், அன்பிற்கு இன்றியமையாதது என்னவென்றால், ஒன்று ஒருவர் நேரடியாக முன்னால் இருக்க வேண்டும் அல்லது அவருடைய சித்திரமாவது முன்னால் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்கள் தங்களுடைய ஒரு கவிதையில் இதே உண்மையை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்கள்:

தரிசனம் கிடைக்கவில்லை என்றாலும், உரையாடலே போதுமானது. என் பிரியமானவனின் அழகின் அடையாளங்கள் இன்னும் இருக்கவே செய்கின்றன.

அதாவது, (இறைவனான அந்த) நேசத்திற்குரியவன் நேரில் வரவில்லை என்றாலும், அவனது குரலையாவது கேட்க வேண்டும், அல்லது அவனது அழகின் ஏதேனும் ஓர் அடையாளம் தென்பட வேண்டும்.

எனவே, ரப் (படைத்துப் பரிபாலிப்பவன்), ரஹ்மான் (அளவற்ற அருளாளன்), ரஹீம் (மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவன்), மாலிக்கி யவ்மித்தீன் (தீர்ப்பு நாளின் அதிபதி), ஸத்தார் (குறைகளை மறைப்பவன்), கஃப்பார் (மிகவும் மன்னிப்பவன்), குத்தூஸ் (பரிசுத்தமானவன்), முஹைமின் (பாதுகாவலன்), ஸலாம் (சாந்தியளிப்பவன்), ஜப்பார் (அடக்கியாள்பவன்), கஹ்ஹார் (மிகவும் வல்லமை பொருந்தியவன்) போன்ற இறைப் பண்புகளை நாம் நம் மனதில் இருத்தும்போது, இறைவனைப் பற்றிய ஒரு சித்திரம் நம் முன்னால் வந்துவிடுகிறது. அதன் விளைவாக நம் இதயங்களில் அவன் மீதான அன்பு உருவாகி விடுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், இறைப் பண்புகளை மீண்டும், மீண்டும் தொடர்ந்து நினைவுகூர்வதன் விளைவாக, இறைவனைப் பற்றிய ஒரு சித்திரம் உருவாகின்றது. மேலும் அந்தச் சித்திரத்தின் காரணமாகவே நம் இதயங்களில் அன்பு பிறக்கிறது. அதனால்தான் அல்லாஹ் கூறுகிறான்:

குழந்தைகளின் இதயங்களில் தங்களது தாய், தந்தையரைச் சந்திப்பதற்கான ஏக்கம் இருப்பதைப் போன்று, உங்களுக்கும் அல்லாஹ்வுடன் அத்தகைய ஆன்மீகத் தொடர்பு இருக்க வேண்டும். ஆக, ஒருவகையில் உங்களின் அமைதியும், நிம்மதியும் அல்லாஹ்வுடன் மட்டுமே தொடர்புடையதாக இருக்க வேண்டும். ஏனெனில், உங்களது ஆன்மீக வாழ்வு இதைத்தான் சார்ந்துள்ளது. மேலும், ஹஜ்ஜுக்குப் பிறகு, தன் தாய், தந்தையின் அரவணைப்பில் தன் வாழ்க்கையைக் கழிப்பதைப் போன்று, மேலும் அவர்களின் நற்பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் தனக்குள் வளர்த்துக்கொள்ள முயற்சிப்பதைப் போன்று, நீங்களும் இறைப் பண்புகளின் கண்ணாடியாக மாறி, அவனது அரவணைப்பின் நிழலில் உங்கள் வாழ்வை கழியுங்கள்.


(தப்ஸீரே கபீர்,தொகுதி 2)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad